சுதந்திரன்
SUTANTIRAN
தொலைபேசி 23411. விலை: சதம் 60
வள்ளுவர் ஆண்டு 2005, தை 13, முறை: 13 (26-1-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 23

## டாக்டர் கொல்வினுக்கு செல்லத்தம்பு கேள்வி!

"சீவல் தொழிலாளர்களுக்கு அவர்கள் சீவும் மரங்களைச் சொந்தமாக்குவேன் என்று இங்கு வந்த போது கூறினாராம் டாக்டர் கொல்வின்! நான் அவரைக்கேட்கிறேன்— மரங்களை சொந்தமாக்குவேன் என்று கூறும் நீர் ஏன் மரங்கள் நிற்கும் காணிகளையும் சொந்தமாக்கி அவர்கட்கு வழங்கக் கூடாது?

திரு. செல்லத்தம்பு பா. உ.
(தேர்தல் கூட்டமொன்றில்)

# அள்ளிவைத்தது ஐக்கிய முன்னணி அரசு தமிழனுக்கு!

# கொள்ளிவைத்த கொல்வின் கூறுகிறார் பச்சைப்பொய்!

# தள்ளிவைக்குது அரசியல் சட்டம் தமிழ் உரிமைகளை!

# துள்ளி எழு தமிழினமே துரோகிகளை வீழ்த்திவிடு!

### இடைத்தேர்தலில் விழுவதற்கு முன்பே மீசையில் மண்பட வில்லையாம்!

"தமிழரசுக் கட்சியினர், புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் எதிர்ப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் நடந்த பொதுத்தேர்தலில் வி. பொன்னம்பலத்துக்கு வாக்களித்த எண்ணுபிரத்துச்சொச்சத் தமிழரும் புதிய அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்!"

—குமாரசூரியர்
(டெயிலி மிறர் 22-1-75)

புதிய அரசியல் சட்டத்தில் 1966ம் ஆண்டின் தமிழ்மொழிப்பிரமாணங்களுக்கும் இடமளிக்கப்பட்டிருப்பதாக பச்சைப்பொய்யொன்றை யாழ்ப்பாணத்திலே துணிச்சலாக அவிழ்த்துவிட்டிருக்கிறார் அரசியலமைப்பு அமைச்சரான டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா!

1966ம் ஆண்டின் தமிழ் மொழிச் சட்டப்பிரமாணங்களைப் பற்றியும் அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது உண்மைதான்! ஆனால் அதுபற்றி அரசியல் சட்டம் கூறுவது என்னவென்பதுதான் முக்கியமானது!

1958ம் ஆண்டின் 28வது சட்டமான தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட எந்தப் பிரமாணங்களும் (அதாவது 1966ம் ஆண்டின் தமிழ் மொழிப் பிரமாணங்கள்) அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியாக எவ்வகையிலேனும் கருதப்படமாட்டாது என்பதே திட்டவட்டமாக அரசியல் சட்டத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதாவது — இப்படி திட்டவட்டமாக குறிப்பிடாமல் விட்டால் — எங்கே அந்தப் பிரமாணங்களுக்கு இயல்பாகவே அரசியல் சட்ட அந்தஸ்து கிடைத்துவிடுமோ என்கிற அச்சத்தில் சிங்களபௌத்த வெறியர்களைத்திருப்திபடுத்துவதற்கே இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது.

**மாவை சேனாதிராஜா சிறையில் இன்று 690 நாள்!**



1958ம் ஆண்டின் 28வது சட்டமான தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்துக்கு மட்டுமே அரசியல் சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமோ—பிரமாணங்களின்றி செயற்படமுடியாத ஒரு மலட்டுச் சட்டமாகும்.

இச்சட்டத்துக்கு உயிரூட்டுவதற்காகக் கொண்டுவரப்

—5-ம் பக்கம் பார்க்க

## வேலைவாய்ப்புக்களில் தமிழனுக்கு நடைபெறும் கழுத்தறுப்புக்கள்!

● இலங்கை அரசின் நிர்வாக சேவைக்கு 3 முதல் 4 சதவீதமான தமிழர்களே ஐக்கிய முன்னணி ஆட்சியின் கீழ் தெரிவு செய்யப்படுகின்றனர். ஏற்கெனவே சேவையிலுள்ள தமிழர்களை நீக்கிவிட்டு, அந்த இடங்களில் சிங்களவர்களை நுழைக்கும் ஒரு சதித்திட்டமே 55 வயதுடன் இளைப்பாற்றும் திட்டமாகும், இனபாரபட்சங்களினால் திறமையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள்!

● தரப்படுத்தல் என்னும் இனப்பாரபட்சத் திட்டத்தினால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படுவது மட்டுமன்றி — திறமைக்கு முதலிடம் தரப்படாததனால், அறிஞர்களை உருவாக்கும் வாய்ப்புக்களையும் அரசு இல்லாமல்செய்துவிடுகிறது.

● அரசாங்க கூட்டுத்தாபனங்களில் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுவது கஞ்சிக்கு பயறு போட்டது போலவே யுள்ளது. தமிழ் ஈழத்திலுள்ள கூட்டுத்தாபனங்களில் சிங்களவருக்கு வேலைகள் வழங்கப்படும் அதே நேரத்தில், தமிழ் ஈழத்துக்கு வெளியேயுள்ள கூட்டுத்தா

—5-ம பக்கம் பார்க்க

## காங்கேசன்துறை இடைத்தேர்தல் பிரசார வேலைகளில் இ. தொ. கா. தலைவர்கள்!

காங்கேசன்துறை இடைத் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபடுவதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. ஜேசுதாசன், ஆகியோர் 25—1—75ல் யாழ் நகர் செல்கின்றனர்.

## டாக்டர் கலைஞர் தலைமையில் சனார்த்தனம் திருமணம்

ஈழத் தமிழ் இளைஞர்களின் இதயமெலாம் நிறைந்தவரும், உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவருமான டாக்டர் இரா. சனார்த்தனம் எம். ஏ. அவர்கட்கும், டாக்டர் தா. லலிதகுமாரி எம். எஸ். சி. அவர்கட்கும் 2—2—75 ஞாயிறுகாலை 10 மணிக்கு பெரியார் திடலில் மாண்பு மிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் திருமணம் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.



வாழ்த்துச் செய்திகளும், அன்பளிப்புக்களும் அனுப்ப விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்.

இரா. சனார்த்தனம்,
8, ரெண்டால்ஸ் வீதி,
எழும்பூர், சென்னை—600008.

டாக்டர் இரா. சனார்த்தனம், தமது திருமண அழைப்பிதழில், மூதறிஞர் தந்தை செல்வா, பேரறிஞர் அண்ணா, டாக்டர் மு. வரதராசனார் ஆகியோரின் நிழற்படங்களையும் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மூதறிஞர் செல்வாவை ஆதரித்துக் கொழும்பில் பொதுக்கூட்டம்!

காங்கேசன்துறை இடைத் தேர்தலின் முக்கியத்துவத்தை விளக்கியும், மூதறிஞர் தந்தை செல்வாவை ஆதரித்தும், தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளை 30—1—75 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தவிருக்கிறது.

பேரவையின் கொழும்புக் கிளைத் தலைவர் திரு. இரகுபதி பாலசிறீதரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் நாவலர் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். எஸ். செல்லச்சாமி, கோவை மகேசன், அ. வரதராசன், இ. பேரின்பநாயகம், ஈழவேந்தன் கரிகாலன், நவசோதி, க. ம. [illegible] பொன் மதிமுகராசா ஆகியோர் பேசுகின்றனர்.

## யாழ் மேயரிடம் ரூபா 8½ இலட்சம் மேலதிகவரி!

யாழ் மாநகர சபைக்கு சட்டவிரோதமாக மேலதிக ஊழியர்களை நியமித்ததற்காக — ரூபா 8½ இலட்சம் அவரிடமிருந்து மேலதிகவரியாக ஏன் அறவிடக்கூடாதென்பதற்கு காரணம் காட்டுமாறு கணக்குத் தணிக்கை அதிகாரிகள் யாழ் மேயரும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி எடுபிடியுமான திரு. அல்பிரட் துரையப்பாவிடம் கேட்டுள்ளதாக் தெரிய வருகிறது.

தணிக்கை அதிகாரிகளின் கடிதத்தைக் கண்டு வெகுண்ட திரு. துரையப்பா, மாநகரசபை அலுவலகத்தில் வேலை பார்த்துவரும் இரண்டு கணக்காளர்களை இடமாற்றி ஒரு மூலைக்குள் அமர்த்தியிருக்கிறாராம்!

ஏற்கெனவே கூப்பன் மோசடி சம்பந்தமாக திரு. துரையப்பாவை தலைவராகக்கொண்ட யாழ் ப. நோ. கூ. சங்கத்துக்கு யாழ் அரசாங்க அதிபர் ரூபா பத்து இலட்சம் அபராதம் விதித்துள்ளது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி. பி. ஐந்து அம்சத்திட்ட முழக்கமாம்! கொல்வின் அரசியல் சட்ட விளக்கமாம்!

## தமிழனை ஏமாற்றத்தான் எத்தனை பாசாங்கு?

புதிய அரசியல் சட்டம் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப் பட்டுள்ளன. இதனைத் தமிழர் கூட்டு முன்னணியினர் மறுத்து பிற்போக்குத்தனமாக வகுப்புவாதத்தைக் கிளப்புகின்றனர் என்று திரு. வி. பொன்னம்பலம் சமீப நாட்களாகக் கூறிவந்தார்.

உலகின் கண்களிலிருந்து தப்பமுடியாது அரசாங்கம் காங்கேசன்துறைத் தேர்தலை நடத்தப்போகிறது என்பதை ஏற்கெனவே மணந்து அறிந்துகொண்டு அவர் ஐந்து அம்சத் திட்டம் பற்றிக் கதைக்கத் தொடங்கி, இப்போது கரடியாகக் கத்துகிறார்! இப்போதுதான் அவருக்கு தமிழ் உணர்ச்சி வந்ததோ? இதெல்லாம் தேர்தல் 'டூப்' என்று எமக்குத் தெரியும்!

நீங்கள் ஒட்டிக்கொண்டிருக்கும் அரசாங்கம் உம்முடைய ஐந்து அம்சத் திட்டத்திற்கு உடன்பாடா? அந்தக் கொடிய அரசு அசையாதிருக்க நீர் உமது உடம்பை மட்டும் அசைக்கிறீரே என்று தமிழ் மக்கள் பொன்னம்பலத்தார் மீது கேள்விக் கணைகள் தொடுத்து அவரைத் திறனற அடித்துக் கொண்டிருக்கின்றனர்!

இந்தப் பரிதாபகரமான வேளையில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல் அமைப்பு குறித்து தவறான அபிப்பிராயங்களுக்கு விளக்கம் அளித்து வி. பிக்கு தேர்தலில் ஆள் சேர்க்க வட பகுதிக்கு வரப் போகிறாராம்!

சோஷலிச வாதிகளின் கோமாளிக் கூத்தைப்பாருங்கள்!

அரசியல் சட்டம் தமிழருக்கு நீதியானது என்ற கருத்தை அன்று கூறிய பொன்னம்பலம், இன்று ஐந்து அம்சத் திட்டத்தை தானே (ஐக்கிய முன்னணியிலுள்ள தனது சகபாடிகளுடன் அல்ல) முன்னுக்குக் காட்டுகிறார்!

அப்படியானால்-

இன்று ஐந்து அம்சத்திட்டத்தை முன்வைப்பதிலிருந்து அரசியல் சட்டம் தமிழ் மக்களுக்கு அநீதியானது என்பதைப் பொன்னம்பலமும் ஒப்புக்கொள்ளுகிறார்தானே!

பொன்னம்பலம் அப்படி சந்தர்ப்பவாதியாக நிறம் மாற கொல்வின் ஆர். டி. சில்வா வந்து அரசியல் சட்டம் பற்றிய தவறான அபிப்பிராயங்களுக்கு விளக்கமளிக்கிறாராம். அதே பொன்னம்பலத்தின் தேர்தல் கூட்டத்தில் அதாவது அவர் இந்த அரசியல் அமைப்புச் சட்டம் சரியானது என்று கூறுகிறார்!

தமிழ் மக்கள் ஐந்து அம்சத் திட்டம் பற்றி அளக்கும் பொன்னம்பலத்தின் பேச்சைக் கேட்பதா? அரசியல் சட்டம் சரியானதே என்று (விதண்டாவாத) விளக்கம் அளிக்கும் அமைச்சர் கொல்வினின் பேச்சைக் கேட்பதா?

இப்படிப் பேச்சுக்களைக் கேட்டு திகைத்துவிட்டால் மட்டும் போதாது மேற்படி இரு சோஷலிஸ்டுகளின் பொய் வேடம் கலையக் கேள்விக் கணைகளைக் காங்கேசன்துறை மக்கள் தொடுத்து அவர்கள் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்யவேண்டும்.

—ஆனந்தன்.

காங்கேசன்துறை இடைத் தேர்தல் ஆண்டானுக்கும் அடிமைக்கும் நடைபெறும் மோதல்! நாம் தொடர்ந்தும் அடிமையாக மாறவேண்டுமா அல்லது மீண்டும் ஆளவேண்டுமா என்பதனைத் தீர்க்கமாகத் தீர்மானிக்கும் களம் இது!

தந்தையவர்கள் வெல்வார்கள் என்பது உறுதி ஆனால்— தந்தைக்கெதிராக அல்ல — தமிழ் இனத்திற்கு எதிராக நம்முன் தோன்றியுள்ள இனத்துரோகிக்கு கட்டுப்பணமில்லாது செய்ய வேண்டும், நூற்றுக்கணக்கான வாக்குகள் கூட —ஏன் ஒருவாக்குத்தானும் எதிரிக்கு ஏன் விழவேண்டும் என்பது என் எண்ணம் மட்டுமல்ல— வெளி மாவட்டங்களில் வாழும் சகல தமிழ் அனுதாபிகளினதும் — ஆதரவாளர்களினதும் ஏகோபித்த குரலும் இதுவாகவே உள்ளது.

எனவே மாவட்டங்களில் வாழும் நமதரும் தமிழ்க் குலமே! தந்தையவர்களால் ஏற்படுத்தப்பட்ட இப் போர்க்களத்தில் பணியாற்றிட—உரிமைக்குரல் எழுப்பிட அணியணியாகத் திரண்டு வாரீர்! காங்கேயன் தொகுதியில் உள்ள ஒவ்வொரு இல்லந்தோறும்— தமிழ்ப்பரணி பாடிடபடைபடையாகத் திரண்டு செல்லுங்கள்! இத்தேர்தல் தெருக்கள் அமைக்கவும்—கட்டிடங்கள் கட்டவும்—அரிசி, மாவு, சீனி பெறுதற்காகவும் நடைபெறும் தேர்தல் அல்ல. இங்கே முன்வைக்கப்பட்டுள்ளது--தமிழர் தம் மானப் பிரச்சினை! உரிமைப் பிரச்சினை! என்பதனை ஓரணியாக எடுத்து விளக்குங்கள்! மாற்றான் படை நம் எல்லைக்குள் புகமுடியாத வண்ணம்படை திரளுங்கள்! நம் ஆஸ்தான கவிஞன் காசி கூறியது போல,

மறவர் படைதான் தமிழ்ப்படை<br>
குலமானம் ஒன்றே அடிப்படை<br>
வெறிகொள் தமிழர் புலிப்<br>
படை அவர்<br>
வெல்வார் என்பது வெளிப்<br>
படை?

என்று பாடி செயற்படுங்கள்: வீட்டிற்கொருவராகுதல் புறப்படுங்கள்!

ஈழத்தமிழ் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ள காங்கேயன் தொகுதியின் மறத் தமிழ்க் குலமே!

கடந்த 2½ வருடங்களாக சிங்களச் சிறையில் சிக்குண்டு வெளிவந்துள்ள நம் ஆஸ்தான கவிஞனை—காசி ஆனந்தனுக்கு உங்கள் உளமார்ந்த நன்றியை — அன்பினை — பாசத்தினைக் காட்டவேண்டுமானால்—உங்கள் முழு ஆதரவினையும் தந்தை செல்வாவிற்கே அளித்திடவேண்டும்! இன்னும் சிறை மீண்ட செம்மல்களுக்கும் — சிறையில் வாடும் ஏந்தல்களுக்கும் — தமிழாராய்ச்சி மாநாட்டின் போது வெறியர்களால் படுகொலை செய்யப் பட்ட தீந்தமிழ் உள்ளங்களுக்கும் நீங்கள் அளித்திடும் அன்பளிப்பு —காணிக்கை! உங்கள் வாக்கினை செல்வாக்காக்கவேண்டியதே! ஈழத்தமிழின் வரலாற்றிலே—புதிய திருப்பத்தினை உருவாக்கிவிட்ட—தன் பொன்னான உடலினை செந்தமிழ் விடுதலைக்கு எருவாக்கிவிட்டே என்னரும் உயிர்க்குயிரான உடன்பிறப்பு உங்கள் உள்ளங்களையெல்லாம் கொள்ளைகொண்டிட்ட கொள்ளையன்— தம்பி சிவாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமானால்— நீங்கள் — உங்களது வண்டமிழ் வாக்குகளை—தங்கசழமமைத்திடத் துணிந்து—தன் உடலையும், பொருளையும், சுகவாழ்வினையும் தமிழுக்காக அர்ப்பணித்து—சிங்கள அரசிற்கு சவால்விட்டு மறுபடியும் ஒரு தேர்தற் களத்தினை உருவாக்கித் தந்திட்ட நம் பெரியவர் தந்தை செல்வாவிற்குரித்தான சின்னமான வீட்டிற்கே உங்கள் தீந்தமிழ் வாக்குக்களைப் போட்டு—அமோக வெற்றியளித்து—பாரெல்லாம் நின் பைந்தமிழ் வீரம் செறிந்திட — புகழ்ந்திட சிகரமமைத் திடுவீர் என அன்னை தமிழின் பெயரால் தாழ் பணிந்து நிற்கின்றேன்!

—கலைநிதி தேவா.

தமிழ் மக்கள் அரசியல் தெரியாத வெறும் பூச்சியங்கள் என்று நினைத்துக்கொண்டார்களா? அவர்கள் நினைப்பதுபோல் தமிழ் மக்கள் ஏமாறிய காலமும் அவர்களை ஏமாற்றிய காலமும் மலையேறிவிட்டது என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். தமிழினம் சத்தியவழியிலே நியாயமானதும் நிச்சயமானதுமான உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஈடுபட்டிருக்கும் போராட்டத்திலே தடைக்கற்களாக, காட்டிக்கொடுக்கும் காக்கை வன்னியர்களாக, எட்டிமரம் போன்ற எட்டப்பர்களாக வரும் சந்தர்ப்பவாதிகளைச் சமூகத்துரோகிகளைத் தூக்கி எறிந்து தாம் தொடர்ந்த இலட்சியப் பாதையில் வெற்றி நடை போடுவார்கள் என்பது வெள்ளிடைமலை.

—அளவையூர் மலர்.

எதிர்வரும் 6-ம் திகதி நடைபெறும் இடைத்தேர்தல் ஒரு சாதாரண தேர்தலல்ல, 36 லட்சம் தமிழ் பேசும் மக்களும் நாய்களோ, அன்றி பேய்களோ, அல்ல மானமுள்ள தமிழ் மக்கள் என்பதை அகில உலகுக்கும் எடுத்துக் காட்டுகின்ற தேர்தல்.

மப்பும் மந்தாரமுமான இன்றைய அரசியல் வானில் உலக நாடுகளின் உன்னிப்பான கவனம் ஈழத் தமிழகத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் தந்தைக்கு கிடைக்கும் மகத்தான வெற்றி தந்தை செல்வா வழிநின்று தன்மானத் தமிழரசு காணத் திரண்டு விட்டோம் என்பதை அகில உலகுக்கும் அம்மா ஆட்சிக்கும் எடுத்துக் காட்டுகின்ற தேர்தல். இந்த தேர்தலில் தந்தை வெற்றியடைவது என்பது சாதாரண சிறு குழந்தைக்கும் தெரியும். ஆனால் வெற்றியல்ல முக்கியம் தந்தையை எதிர்த்து அரசு தரப்பில் போட்டியிடும் பொன்னரை எவ்வளக்கெவ்வளவு வாக்குகளால் தோற்கடிக்கிறோமோ அதுதான் வெற்றி.

இந்த தேர்தலில் காங்கேசன்துறை தொகுதி மக்களுக்கு பெரும் பாரம் ஒன்று சுமத்தப்பட்டிருக்கிறது என்பதை தொகுதி மக்கள் நன்கு உணர வேண்டும். இதில் தலைவர்கள் மீது உள்ள தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களையோ, அன்றேல் என்னை கூட்டணித் தலைவர்கள் வந்து முதல் சந்திக்கவில்லை என்ற குறுகிய நோக்கத்தையோ, கூட்டணித் தலைவர்களில் பெரும் பாலோர் வழக்கறிஞர்கள் என்ற படியால் சிலசமயங்களில் எதிரிக்காகவோ வாதிக்காகவோ வழக்காட வேண்டியிருப்பதால் அவர்கள் தொழிலே காரணமாக கொண்டு வாதாடினர் என்று அவர்களின் தொழிலே அது என மறந்து தனிப்பட்ட குரோதங்களை சாதிக்கவேண்டாம் என என்னருமை தமிழ் மக்களை தயவாக வேண்டுகிறேன்.

இது தனிப்பட்ட செல்வாவுக்கும் பொன்னம்பலத்துக்கு நடைபெறுகின்ற தேர்தலாக இருப்தால் உங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை சாதிக்கலாம். ஆனால் 36 லட்சம் தமிழ் பேசும் மக்களின் எழுச்சியை உருவாக்கிய தந்தை செல்வாவுக்கும், அண்டிப் பிழைத்து அடிமையாக பழகிவிட்ட பொன்னம்பலத்துக்கும் நடைபெறுகின்ற போட்டி, இதில் தந்தை தமிழ் ஈழம் அமைக்க கர்த்து கொண்டிருக்கும் தன்மானத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவே போட்டியிடுகிறார்.

இத்தேர்தலில்தான் நாம் எமக்கென்று ஒரு தாயகத்தை அமைத்து தன்மானத்துடன் வாழப் போகிறோமா, அல்லது சிங்கள மக்களுக்கு தேசக்கரம் நீட்டி இதுவரை மோசம் போனது போல தொடர்ந்து ஆகப் போகிறோமா என்பதே கேள்வி? ஒரு காலம் ஈழம் முழுவதும் செங்கோலோச்சிய தமிழினம், இரண்டாந்தர பிரசை என்ற இழிசொல் தகர்த்து, தன்மானத்துடன் வாழப்போகிறோம் தமிழ்த் தலைவா! தானைத் தலைவா! தந்தை செல்வா ஆணையிடு. உன் ஆணை கேட்டால் தூக்கென்ன, மரமென்ன, துப்பாக்கி குண்டென்ன, அடியென்ன, உதையென்ன, உயிர்தான்போனால் என்ன, என்று தமிழ் ஈழம் அமைக்க துடித்துக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கெல்லாம் புதிய உத்வேகத்தை இந்த தேர்தல் முடிவுதான் கொடுக்க வேண்டும்!

—எஸ். ஜே. வி. ராஜகுமார்,
மாதகல்.

காங்கேசன் துறைத் தொகுதி அபிவிருத்திச்சபையின் 8வது ஆண்டுவிழாவில் வி. பி. ஆற்றிய உரையின் ஒருபகுதியை துண்டுப்பிர

## கொதிக்கின்ற தமிழுள்ளங்கள் காங்கேசன்துறை நோக்கி விடுக்கின்ற சில வேண்டுகோள்

சுரமாக வெளியிட்டிருக்கின்றுர்கள் கம்யூனிஸ்ட்டுகள்.

அதில் வி. பி. என்ன கூறுகின்றுர் தெரியுமா? "அரசியல் சாசனம் முழுக்க முழுக்கத் தமிழுரிமையைத் தரவில்லை என்று கூறினுல் நான் அதை ஏற்றுக்கொள்கின்றேன். நாம் விரும்பும் அளவிற்குத் தமிழுரிமைகள் உறுதிப்படுத்தப்படவில்லை என்று கூறினுல் அதை எவரும் மறுக்கமுடியாது" இப்படிக் கூறும் வி.பி.யே! சவாவின் கருத்தை இன்னும் நீர் அறியீரோ? புதிய அரசியல் சாசனத்தைத் தமிழர்கள் ஏற்கின்றுர்களா? இல்லையா? என்பதை அறிவதற்காகவே ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல் தமிழர் பெரும்பான்மையாக வாழும் காங்கேசன்துறைத் தொகுதியில் தேர்தலை நடாத்தப்போகின்றது சிங்கள அரசு. தோழர் வி. பி. தந்தையை எதிர்த்துப் போட்டியிடுவதன் அர்த்தம் என்ன? 'அரசியல் சட்டத்தைத் தமிழர்கள் ஏற்கிறுர்கள் என்பதுதானே. அப்படியானுல் தங்களின் சொல்லொன்று செயலொன்றுக இருப்பதன் மர்மம் தான் என்ன? ஆமாம் தங்களில் பிழையில்லைத் தோழரே. கம்யூனிஸ்ட்டுகளின் பிறவிக்குணமே அஃது தான். இதைத் தமிழ் மக்கள் எப்பொழுதோ புரிந்துவிட்டார்கள். ஆனுல் கம்யூனிஸ்ட்டுகள்தான் தமிழினத்தைப் பற்றிப் புரிந்துகொள்ளாமல் ஏதோ தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டிருக்கின்றனர்.

## கம்யூனிஸ்டுகள் தமிழ் மக்களுக்கு தந்த இன்பம்!

"காங்கேசன்துறைத் தேர்தலானது ஏழைத்தொழிலாள விவசாயிகளுக்கு இன்பமயமான வாழ்வையளிக்கும் முற்போக்குச் சக்திகளுக்கும், பிற்போக்குச் சக்திகளுக்குமிடையில் நடைபெறும் தேர்தல் ஒன்று கம்யூனிஸ்டுகள் கூறுகிறுர்கள். ஆனுல் அவர்களும் அரசாங்கத்தில் சேர்ந்திருந்து கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு எவ்வளவு இன்பத்தைக் கொடுத்தார்கள் என்பதை சிந்திக்கவேண்டும். மட்டக்களப்பில் காடுகளை வெட்டி களனியாக்கிய தமிழ் விவசாயிகளை விரட்டியடித்ததா? தரப்படுத்தல் மூலம் பொறியியலாளர்களாக, விஞ்ஞானிகளாக வரவேண்டிய மாணவர்களை மட்டம் தட்டியதா? தமிழை ஆராய்ந்த குற்றத்துக்காக 11 பேர் சாகடிக்கப் பட்டதா? இதில் எது இன்பம் என்று அவர்களை நாம் கேட்கின்றோம்"

—நாவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்மான யுத்தம்!

அன்பு நண்பா,

**"இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு அநியாயம் செய்துவிட்டது என்பதைச் சுட்டிக்காட்டி தங்களுக்கு காங்கேசன்துறை இடைத்தேர்தலில் ஆதரவு திரட்டும் மறைமுக நோக்கத்துடன் தமிழரசுக்கட்சி தரப்படுத்தல் திட்டத்தை எதிர்த்து வருகின்றது. தரப்படுத்தல் திட்டத்தை கல்வி மந்திரி தான்தோன்றித்தனமாக தயாரிக்காமல் கல்விமான்களின் ஆலோசனையுடன்தான் செயல்படுத்தியுள்ளார். எனவே வகுப்புவாத நோக்கத்துடன் இந்த அரசு தரப்படுத்தல் திட்டத்தை செயற்படுத்தி தமிழ் மக்களை அநியாயமாக ஒடுக்கி வருகிறது என்ற கூற்று நியாயமற்றதாகும். இந்த அரசாங்கமும் இவ்வமைச்சும் இதுவரை தமிழ் பிள்ளைகளுக்கு எவ்வித அநியாயத்தையும் இழைக்கவில்லை!"**

நண்பா, தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை வெட்டி வீழ்த்தி—அவர்களை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளி—தமிழ் மக்களின் உள்ளங்களையெல்லாம் உலைக்கூடமாக்கிய கேடுகெட்ட — நாகரீக உலகமும்— சனநாயக உள்ளங்களும் காறியுமிழுகின்ற இனவெறித் திட்டமான 'தப்பப்படுத்தல்' திட்டத்துக்கு—இத்துணை தூரம் வக்காலத்து வாங்கி, முழுப் பூசினிக்காயை பிடிசோற்றில் மறைத்திட மேற்கண்டவாறு முயற்சித்திருப்பவர் யார் என்று கேட்கிறாயா? இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர்; காங்கேசன்துறை இடைத்தேர்தலில் சிங்கள ஏகாதிபத்தியத்தின கங்காணியாகப் போட்டியிடுகின்ற திரு. வி. பொன்னம்பலத்தின் நெருங்கிய தோழர்; முற்போக்கு அரசாங்கம் என்று கூறப்படும் ஐக்கியமுன்னணி அரசின் துணைக்கல்வியமைச்சர்; இப்போது சிலநாட்களாக "தரப்படுத்தல்" தவறானது என்று பேச ஆரம்பித்திருக்கும் பீட்டர்கெனமனின் பிரதான சீடர்; சாட்சாத் திரு. துடாவை அவர்களே 'தரப்படுத்தல்' எனும் இனக்கொலைத் திட்டத்துக்கு இவ்வளவு தூரம் வக்காலத்து வாங்கியிருக்கிறார்!

இப்படி வக்காலத்து வாங்கிய இடம் மாலை நேர மேடையுமல்ல; மாலை நேர மேடையாக இருந்திடின் — ஒருவேளை அவர் தாம் அப்படிக் கூறவேயில்லையென்று மறுத்திடக்கூடும்; கூறிய இடம் தேசிய அரசப் பேரவை; கூறிய காலமும் அதிக நாட்களுக்கு முந்தியல்ல; 6-12-74ல்! கூறிய கருத்து — மறுக்கமுடியாதபடி எழுத்துக்கு எழுத்து பேரவை நடவடிக்கைக் குறிப்பேட்டில் அப்படியே இடம்பெற்றுமிருக்கிறது!

இவ்வாறு அழுத் தந்திருத்தமாக — திட்டவட்டமாக—தரப்படுத்தும் தமிழின விரோத நடவடிக்கைக்கு ஒரு திங்களுக்கு முன் வக்காலத்து வாங்கிய இவர்கள்தாம் — தமிழ் விரோத செயலுக்கு உடந்தையாக இருந்த இதே கம்யூனிஸ்டுகள் தாம்—இன்றைக்கு காங்கேசன்துறை இடைத்தேர்தல் கண்முன்னே தெரிகின்ற நேரத்தில் கட்டுப்பணத்தையாவது காப்பாற்றிட முடியாதா என்கிற ஒரு நப்பாசையில் — 'தரப்படுத்தலை' தாங்களும் எதிர்ப்பதாக ஒரு 'திடீர்' நாடகத்தை ஆட முற்பட்டிருக்கிறார்கள்!

தோழர் பீட்டர்கெனமன் தாம்செல்லுமிடமெல்லாம் 'தரப்படுத்தல்' திட்டத்தைதிருத்தியமைப்போம் என்று பேசிவருகிறார்! திறமையுள்ளவர்கள் உயர் கல்வியில் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது அநியாயம் என்று நீலிக் கண்ணீர் வடித்துவருகிறார்! ஐக்கிய முன்னணி ஆட்சிபீடமேறிய பின்னர்—கடந்த 5 ஆண்டுகளாக திட்டமிட்டு தமிழ் மாணவர்களுக்கு எதிராக கடைப்பிடிக்கப்பட்டுவந்த இந்த காட்டுமிராண்டித்தனமான இனப் பாரபட்சம்—காங்கேசன்துறை இடைத்தேர்தல் சமயத்தில்தான் கம்யூனிஸ்டுகளின் கண்களுக்கு தெரிய ஆரம்பித்திருக்கிறதென்றால்-இவ்வளவு காலமும் 'சிங்கள இனவெறி' எனும் சதை அவர்களது கண்களை மூடி மறைத்துக்கொண்டிருந்தது என்பதுதான் அர்த்தமாகும்!

இப்போதுகூட அந்தச் சதையை ஆபரேஷன் செய்து நீக்கிவிட்டு — கம்யூனிஸ்டுகள் காங்கேசன்துறைக்கு வந்திடவில்லை! கொஞ்சம்சதையை தூக்கிக் கொண்டு பார்க்கிறார்கள்! அவ்வளவுதான்! இடைத்தேர்தலில் தமிழ் மக்கள் இடப்போகும பட்டை நாமத்தின் பின்னர் 'சிங்கள இனவெறி' எனும் சதை அவர்களது கண்களை பழையபடி மூடிவிடும்—இருந்து பார் நண்பா!

'தரப்படுத்தல்' திட்டத்தினால் தமிழ் மாணவர்கள் ஒதுக்கப்பட்டுவிட்டது குறித்து கம்யூனிஸ்டுகள் இப்போது வடித்துவரும் முதலைக் கண்ணீர் ஒருபுறமிருக்கட்டும்! கடந்த ஐந்து ஆண்டுகளாக — *1970, 1971, 1972, 1973 1974*ம் ஆண்டுகளில் — சிங்கள இனவெறியர்களை திருப்திப்படுத்துவதற்காக தமிழ் மாணவர்களுக்கு எதிராக திட்டமிட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த 'தரப்படுத்தல்' எனும் மிலேச்சத்தனமான இன ஒதுக்கல் கொள்கையை உருவாக்கியவர்கள்—அதற்கு உடந்தையாக இருந்தவர்கள்—ஒத்துழைப்பு நல்கியவர்கள்—சிறீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாசக்கட்சி ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சிபீடத்திலமர்ந்து—ஒன்றரை மந்திரிப் பதவியையும் பிடித்து வைத்திருக்கும் இதே கம்யூனிஸ்டுகள் தாம் என்கிற உண்மையை எந்த ஒரு தமிழனாவது மறக்கமுடியுமா? அதிலும் துணைகல்வியமைச்சராக துடாவை எனும் ஒரு கம்யூனிஸ்ட் பதவி வகிக்கும்போதே முற்போக்கு, சோசலிச கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்பட்ட 'தரப்படுத்தல்' எனும் "இன[illegible]பாரபட்சம்" முழு வேகத்துடன பின்பற்றப்பட்டதென்ற உண்மையை யாரும் மறுத்திட முடியாது!

நண்பா, பத்தாண்டுகளுக்கு ஒரு முறைதான் இந்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு தாங்கள் விட்ட தவறுகளை உணருகின்ற "ஞானம்" பிறப்பது வழக்கம்! தவறுகளை உணருவார்களே தவிர—அவற்றை திருத்திக்கொள்ளும் உறுதி அவர்களுக்கு கிடையாது!

ஆம் நண்பா, 1961ம் ஆண்டு தமிழ் மக்கள் மொழியுரிமை கோரி அறப் போராட்டத்தி லீடுபட்டிருந்த நேரத்திலும் அதன்பின்பும் — தாங்கள்விட்ட தவறுகளை விளக்கி1971ம் ஆண்டு

## அரசியல் மேடை

ஆகஸ்ட் 4, 5ம் திகதிகளில் யாழ் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் ஒரு இரகசிய அறிக்கையை வெளியிட்டிருந்தனர். அதில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தனர்:-

"ஆனால் இக்கால கட்டத்தில் எமது பிரதேசக்கிளை விட்ட தவறுகளை விமர்சிக்கும் கடமை எங்களுடையதே. இப்பிழைகள் பின்வருமாறு:-

**"தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவற்றை அவர்கள் மத்தியில் திணிக்க முயற்சித்தமை!"**

"*1961*ம் ஆண்டு தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்ட பொலிஸ் இராணுவத்தின் அத்துமீறிய அட்டூழியங்களைக் கண்டிக்கத்தவறிவிட்டோம்!

"*1966*ம் ஆண்டு தைமாதம் 8ம் திகதி (தமிழ் மொழிப் பிரமாணங்கள் மசோதா கொண்டுவரப்பட்ட நாள்) கொழும்பில் ஏற்புட்ட சம்பவங்களைப்பற்றி எமது பிரதேசக் கமிட்டி எடுத்த முடிவுகளும், அதே வருடம் மேதினக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களும் இதே காலங்களில் கட்சிப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளும் தமிழ் மக்கள் மத்தியில் எமது கட்சிமீது வெறுப் பேற்படுத்தக் கூடிய சம்பவங்களாகும்!

**"இத்தவறுகளைத் திருத்தாமலும்—பொது மக்கள் மத்தியில்—அடிப்படையான வேலைகளைச் செய்யாமலும் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பல சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் மூலம் உடன் படிக்கைகளை ஏற்படுத்த முயற்சித்தோம்!"**

இப்படி தமது சந்தர்ப்பவாதத்தையும்—தமிழ் விரோதப்போக்கையும்—*1971*ம் ஆண்டு இரகசியமாக தமக்குள் தாமே ஒப்புக்கொண்டுள்ள இதே கம்யூனிஸ்ட்டுகள் தாம்—இன்றைக்கும் அதே சந்தர்ப்பவாதச் சாக்கடைக்குள் இருந்து மீள முடியாமல் தத்தளிப்பது மட்டுமன்றி—தமிழ் மக்களையும் அதற்குள் இழுத்து விழுத்த முயற்சிக்கின்றனர்!

"தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவற்றை அவர்கள் மத்தியில் திணிக்க முயற்சித்தமை" தாங்கள் விட்ட தவறுகளில் ஒன்றென்பதை *1971*ம் ஆண்டு இரகசியமாக ஒப்புக் [illegible] கம்யூனிஸ்ட்டுகள்—இன்றைக்கும் அதே தவறையே காங்கேசன்துறை இடைத் தேர்தலில் செய்து கொண்டிருக்கின்றனர்! இவர்கள் இத்தவறை உணருவதற்கு இன்னும் பத்தாண்டுகள் பிடி[illegible]

தாலும் பிடிக்கலாம்! ஆனால் யாழ் பிரதேச கம்யூனிஸ்ட்டுகள்தாம் என்ன செய்வார்கள் பாவம்? தங்கள் எசமானர்களாகிய பீட்டர் கெனமனும், விக்கிரமசிங்காவும் துடாவையும் ஏவுவதை செய்வது தவிர இவர்களால் வேறு எது முடியும்?

ஆம் நண்பா, தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத புதிய அரசியல் சட்டத்தை தமிழர்களை அடிமைகளாக்கும் புதிய அரசியல் சட்டத்தை—சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசியல் சட்டத்தை—தமிழ் மக்கள் மீது திணிக்க முயலும் கருவிகளாக இன்றைக்கு சிங்கள ஏகாதிபத்தியம் தமிழ் கம்யூனிஸ்ட்டுகளை காங்கேசன்துறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. சிங்கள ஏகாதிபத்திய சூழ்ச்சி வலைக்குள் மயங்கிக்கிடக்கும் திரு. வி. பொன்னம்பலம்—தமிழினத்தையே அதற்குள் சிக்க வைத்திட இன்றைக்கு பிரமப்பிரயத்தனப்பட்டு வருகிறார்!

ஆனால் நண்பா—தமிழ் மக்கள் மீது சிங்கள ஏகாதிபத்திய அரசியல் சட்டத்தைப் புகுத்திட சிங்கள ஆட்சி இடது சாரிகள் என்று கூறப்படுபவர்களையே பயன்படுத்தும் என்பதை 1972ம் ஆண்டே 'டிறிபியூன்' என்கிற ஏடு திட்டவட்டமாக கூறிவைத்திருக்கிறது. இத்தனைக்கும் 'டிறிபியூன்' ஏடு நம் இயக்கத்தைச் சேர்ந்தவரால் நடத்தப்படுவது அல்ல; ஓர் உண்மையான இடதுசாரி ஆதரவாளரால் நடத்தப்படுவது அந்த ஏடு. அப்படியிருந்தும் அது 1972ம் ஆண்டு மே முப்பதாம் நாள் இதழில் புதிய அரசியல் சட்டம் பற்றியும்—இடதுசாரிகள் என்று கூறப்படுவோர் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கையாட்களாக பயன்படுத்தப்படவிருப்பது பற்றியும் அப்போதே தீர்க்கதரிசனத்துடன் பின் கண்டவாறு எழுதியிருக்கிறது:—

"புதிய அரசியல் சட்டம் சந்தேகமில்லாமல் மூன்றுவகையானவருக்கே ஏற்புடையதாக இருக்கிறது. பௌத்தம் அரசாங்க மதமாக்கப்பட்டு விட்டதென்று மகிழ்ச்சிக்கடலில் மிதக்கும் பௌத்தர்களுக்கும், பருத்தித்துறை தொடக்கம் தேவந்துறை வரை சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியாக்கப்பட்டுவிட்டதென்று மகிழும் சிங்கள மக்களுக்கும் இடதுசாரிகளுக்குமே அது இசைந்ததாக இருக்கிறது,

"இன, மத, மொழி ரீதியிலான சிறுபான்மை மக்களை மிகவும் குறைந்த காலத்தில் சிங்களவர்களாக்கவும், பௌத்தர்களாக்கவும் ஒரு தனிச் சிங்கள நாட்டைஉருவாக்குவதற்கும் ஏற்ற நல்ல சூழ்நிலையை புதிய அரசியல் சட்டம் உருவாக்கிவிட்டதாகவும் அவர்கள் கருதுகிறார்கள். சிறுபான்மை இனத்தினரை விழுங்கிவிடும் திட்டத்துக்கு இடதுசாரிகள் பெரிதும் பயன்படுவார்கள் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்!!"

ஆம் நண்பா, 'டிறிபியூன்' ஏடு சுட்டிக்காட்டியது போல — சிறுபான்மையினத்தவர்களை விழுங்கி ஏப்பமிட்டு ஒரு தனி பௌத்த சிங்கள நாட்டை உருவாக்கட வழிவகுக்கும் புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் மத்தியில் திணிப்பதற்கு—சிங்கள ஏகாதிபத்தியம்—சோரம்போன இடதுசாரிகளை இன்றைக்கு பயன்படுத்தி வருகிறது!

திருவாளர் வி. பொன்னம்பலம் எவ்வளவுதான் தனிப்பட்டமுறையில் நல்லவராக இருந்தாலும்—எத்தனை தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித்தருவதாக அவர் உறுதிமொழி புகன்றிருந்தாலும் — தமிழினத்தை அழித்தொழிக்க விரும்பும் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாக தமிழரை இழிவு நிலைக்கு தள்ளியுள்ள புதிய பௌத்த சிங்கள அரசியல் சட்டத்தின் பாதுகாவலராகவே அவர் காங்கேசன்துறையில் போட்டியிடுகிறார் என்பதை என்னருமைத் தம்பிமார்கள்—தமிழ் இளைஞர்கள்—மறந்துவிடக்கூடாது!

எனவே நண்பா, காங்கேசன்துறை இடைத்தேர்தலில் உண்மையிலே போட்டி தனிப்பட்ட வி. பொன்னம்பலத்துக்கும் தனிப்பட்ட தந்தை செல்வாவுக்குமல்ல! கொத்தடிமைத்தனத்துக்கும் விடுதலை உணர்வுக்கும் போட்டி! ஆதிக்கக்காரர்களுக்கும், அதிலிருந்து விடுபடவிரும்புவோருக்குமிடையிலான போட்டி! சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசியலமைப்புக்கும் தமிழ்த் தேசிய வாதத்துக்குமிடையிலான போட்டி! சர்வாதிகாரத்துக்கும் சனநாயகத்துக்குமிடையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## வி. பி. காட்டும் 'கிலு கிலுப்பை'!

"தமிழ் மக்களில் ஒரு கணிசமான பகுதியினர் இவ்வரசியல் அமைப்பை ஏற்றுக்கொண்டிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. நாம்இதை மறுக்கிறோம். தமது கூற்றை நிரூபிப்பதற்கு அரசாங்கத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கவிரும்புகிறோம். இதற்கு சிறந்த வழியாகத் தமிழர் கூட்டணியின் தலைவர் என்ற வகையில் இச்சபையில் என்னிடத்தை நான் துறந்து எனது கொள்கையை முன்வைத்து நான் மீண்டும் போட்டியிடும்போது அரசாங்கம் தனது கொள்கையை முன்வைத்து என்னோடு போட்டியிடவேண்டுமென்று கேட்கிறேன். அத்தேர்தல் முடிவு தமிழ் மக்களது தீர்ப்பாகவே யிருக்கும்!"

காங்கேசன்துறை தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் பதவியை 1972ம் ஆண்டு அக்டோபர் 3ம் நாள் துறந்த நேரத்தில் அதற்கான காரணத்தை விளக்கி—தந்தை செல்வா அவர்கள் தேசிய அரசுப்பேரவையில் பேசும்போது அரசுக்கு விடுத்தசவாலையே மேலே தந்திருக்கிறோம்!

இந்தச் சவாலை 26மாதங்களின் பின்னர் அரசு ஏற்று—காங்கேசன்துறை இடைத்தேர்தலை எதிர்வரும் பெப்ரவரி 6ம் நாள் நடத்தவிருக்கிறது. அரசாங்கத்தின் சார்பில்—புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்ற அரசின்கொள்கையை முன்வைத்து—ஆளும் கட்சிகளில் ஒன்றான கம்யூனிஸ்ட் கட்சி இத்தேர்தலில் தந்தை செல்வாவுடன் போட்டியிடுகிறது!

ஆம்—காங்கேசன்துறை இடைத்தேர்தலில் போட்டியிடும் தந்தை செல்வா அவர்கள் அரசியல் சட்ட எதிர்ப்பு சக்திகளின் பிரதிநிதியாக போட்டியிடுகிறார். வி. பொன்னம்பலம் அரசு வேட்பாளராக—அரசியல் சட்ட ஆதரவு சக்திகளின் பிரதிநிதியாக—போட்டியிடுகிறார்!

ஆனால் இத்தேர்தலில் ஒரு விசித்திரத்தைப் பார்க்கிறோம்! புதிய அரசியல் சட்டம் நிராகரிக்கப்படவேண்டியது; எதிர்க்கப்படவேண்டியது; என்பதை தந்தை செல்வாவும், தமிழர் கூட்டணியினரும் எவ்வளவு உறுதியுடனும் வைராக்கியமாகவும் இறுக்கமாகவும் வலியுறுத்தி வருகின்றனரோ—அதே அளவு புதிய அரசியல் சட்டத்தை ஆதரிக்கப் புறப்பட்டவர்கள் அது தமிழ் மக்களுக்கு ஏற்புடையது என்பதை அழுத்தமாக இறுக்கமாக—கூறிடத்தயங்கி வருகின்றனர். இது ஒன்றே அவர்களது தார்மீகத் தோல்விக்கு —நெஞ்சாரப்பொய் சொல்லும் அவர்களது போக்குக்கு—கொள்கைக் குழப்பத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

"புதிய அரசியலமைப்பின் மூலம் இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகள் யாவும் வழங்கப்பட்டு விட்டதாக நான் கூறவில்லை" (வீரகேசரி17-1-75) என்று கூறுகிறார் அரசியலமைப்பின் சிற்பியான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா!

"புதிய அரசியல் அமைப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் முழுவதும் தீர்க்கப்பட்டுவிட்டன என்று நான் கூறுவதாக அர்த்தமாகாது!" என்று கூறுகிறார் அரசியல் சட்டத்துக்கு ஆதரவாக போட்டியிடுவதற்கு அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டுள்ள கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. வி. பொன்னம்பலம்.

அப்படியானால் —தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணத்தவறிய—தமிழ் மக்களின் உரிமைகள் யாவற்றையும் வழங்கத்தவறிய-புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்து இவர்கள் ஏன் போட்டியிடுகிறார்கள்? அரசியல் சட்டம் தமிழ்மக்களுக்கு ஏற்புடைத்தானது என்ற தங்கள் கொள்கையை நெஞ்சுரத்துடன்ஆதரித்துவாதாட அஞ்சி நடுங்குபவர்கள்—அரசியல் சட்டத்தை எதிர்த்து வெளிவெளியாகப் போராடும் தந்தை செல்வா அவர்களை போட்டியின்றிதெரிந்தெடுக்க வழி விட்டுக்கொடுக்காது அவருடன் ஏன்போட்டியிட முன் வந்திருக்கின்றனர் என்று கேட்கவிரும்புகின்றோம்!

இதுமட்டுமல்ல—ஆளும் ஐக்கிய முன்னணி சார்பில் அரசியலமைப்பை ஆதரித்து போட்டியிடும் பொன்னம்பலம்—ஐக்கிய முன்னணியினால் ஏற்றுக்கொள்ளப்படாத—ஐக்கிய முன்னணியின் பொதுவேலைத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத—ஐந்து அம்சத்திட்டம் என்று ஏதோ ஒன்றை வைத்து காங்கேசன்துறையில் கிலுகிலுப்பை விளையாட்டுக்காட்டுகிறார்!

தமிழ் மக்களை அடிமை நிலைக்குத்தள்ளி அவமானப்படுத்தியுள்ள சிங்களம் மட்டும் சட்டத்தை, அப்படியே ஏற்றுக்கொள்ளுகின்ற இந்த 5அம்சத் திட்டத்தில்—தமிழ்மொழியின் உரிமைகள் பற்றி இரண்டு அம்சங்களில் மட்டுமே குறிப்பிடுகின்றனர்.

# ஒழிப்பு! ஒழிப்பு! தமிழர் பதவிகள் ஒழிப்பு!

# களிப்பு! களிப்பு! வி. பி. கும்பலின் களிப்பு!

1974ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு விரோதமாகவும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும் சிங்கள அரசு ஆற்றிவந்த துரோக நடவடிக்கையின் உச்சக்கட்டமாக தமிழ்மொழி விசேட விதிகள் சட்டத்தை நிருவகித்தற்கென அரசகரும மொழித் திணைக்களத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த தமிழ் உதவி ஆணையாளர் பதவி ஒழிக்கப்பட்டுள்ளது.

இப்பதவியை வகித்து வந்த திரு. மகாதேவா என்பவர் உடனடியாக புகைவண்டித் திணைக்களத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்மொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காலம் முதல் திருவாளர்கள் நாராயணசாமி, சிவராசா, உருத்திரமூர்த்தி(மஹாகவி)மாணிக்க நடராசா, மகாதேவா ஆகியோர் உதவி ஆணையாளர்களாகப்பதவிவகித்துள்ளனர்

திரு. என். சிவராசா அவர்களது பதவிக்காலத்தில் மொழிபெயர்ப்புப் பகுதி இரு கண்காணிப்பாளர் பதவிகளுடன் விருத்திசெய்யப்பட்டு ஆராய்ச்சிப் பகுதியும் தோற்றுவிக்கப்பட்டது.

ஆனால் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்றதும் தமிழ்மொழிச் சட்டத்தைப் புறக்கணித்து வருவதும் தமிழ்மொழிச் சட்டத்திற்கு எதிராகக் காடையர்களுடன் காலி வீதியில் திரண்டு பொலிசாரின் குண்டுகளுக்குப் பலியாகிய பௌத்த தேரோவுக்குச் சிலை எழுப்பியதும் தமிழ் மக்கள் அறிந்த ஒன்றே.

1974ஆம் ஆண்டு முதல், அரசகருமமொழித் திணைக்களத்தில் கடமையாற்றிய தமிழ்மொழிபெயர்ப்பாளர்களும், ஆராய்ச்சி உதவியாளர்களும் பொது நிருவாகத் திணைக்களம், சட்ட வரையுநர் திணைக்களம், திறைசேரி, நீதி அமைச்சு, உயர்நீதிமன்றம் ஆகிய இடங்களுக்கு அடிக்கடி மாற்றப்பட்டு வரப்பட்டனர்.

இரண்டு தமிழ்மொழி பெயர்ப்பாளர் பதவிகளுக்கும் ஒரு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கும் அரசாங்க வர்த்தமானியில் விளம்பரம் வெளியிடப்பட்டு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தாலும் மூன்று பதவிகளும் ஒழிக்கப்பட்டன. இப்பதவிகளுக்கு பல நூறு பட்டதாரிகள் விண்ணப்பித்திருந்தனர்.

அரசகருமமொழித் திணைக்களத்தைச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளர்களும் ஆராய்ச்சி உதவியாளர்களும் மொழிவழித் தொழிற்சங்கத்தை உருவாக்கிய போது பிரித்தாளும் சூழ்ச்சியைப் பயன்படுத்திய சிங்கள ஆணையாளர் பதவி மோகத்தைக் காட்டி சில தமிழர்களைத் தன்போக்கில் தனிப்படுத்தித் திருப்பியதாயும் தெரியவருகிறது.

சிங்கள ஆணையாளரின் பசப்பு வார்த்தையில் நம்பி உயர்பதவி கிட்டுமென இருந்த ஒரு தமிழர் தான் இருக்கும் பதவியிலேயே தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியாத நிலையில் தத்தளிப்பதாய்த் தெரிய வருகிறது.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனுசனையும் கடிக்கும் நிலையாக, தமிழ் மொழிபெயர்ப்பாளர், ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளுக்கு அள்ளிவைத்த சிங்கள அரசு தமிழ் உதவி ஆணையாளர் பதவிக்கும் கடந்த வாரம் கொள்ளி வைத்துள்ளது.

இதைத் தொடர்ந்து, சிங்கள அரசின் பார்வை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலுள்ள தமிழ்ப் பகுதியின் பக்கம் திரும்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

நீண்டகாலமாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் உயர்பதவி வகித்து வந்த தமிழர்களுக்கு மேலாகக் கல்வியில் தரம் குறைந்தவரை நியமித்து தமிழ் ஊழியர்களிடையேஅதிருப்தியை ஏற்படுத்திப் பிரித்து ஆளும் தந்திரத்தைச் சிங்கள அரசு பிரயோகிக்க முனைந்துள்ளதாயும் அறியப்படுகிறது.

இப்படி தமிழர்களுக்கு கிடைக்கவேண்டிய பதவிகளை கூட பறித்து வரும் சிறிமா ஆட்சியின் கையாளாகத்தான் காங்கேசன்துறை இடைத் தேர்தலில் வ. பொன்னம்பலம் களிப்புடன் போட்டியிடுகிறார்!

(1) நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் கல்வி புகட்டும் மொழியாகவும் அரசுடன் தொடர்புகொள்ளும் அலுவல் மொழியாகவும் தமிழ்மொழியே அமையும்.

(2) வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் பிரதேசங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாக அமையும்.

கம்யூனிஸ்டுகள், தங்கள் ஐந்து அம்சத்திட்டத்தில் தமிழுரிமை பற்றி இந்த இரண்டு அம்சத்தையும் குறிப்பிட்டிருப்பதிலிருந்தே—அவர்கள் வக்காலத்து வாங்கும் புதிய அரசியல் சட்டத்தில் இந்தக் குறைந்தபட்ச உரிமை கூட தமிழுக்கு வழங்கப்படவில்லையென்பதை அவர்களே ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்று ஆகிறது.

தமிழுக்கு இந்தக் குறைந்தபட்ச உரிமைகளைக் கூட வழங்கத்தவறிய புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதில் பூரண பங்குகொண்டிருந்த கம்யூனிஸ்டுகள் தாம்—இன்றைக்கு இந்த அரசியலமைப்பை தமிழ் மக்களும் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டு காங்கேசன்துறையில் போட்டியிடுகிறார்கள்! நஞ்சு என்று தெரிந்து கொண்டபின்னரும், அந்த நஞ்சைப் பருகி தமிழினம் அழிந்தொழிய வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்!

இன்றைக்கு தமிழுரிமை பற்றியும் பிரதேச சுயாட்சி பற்றியும் பேசுகின்ற இதே கம்யூனிஸ்டுகள் தாம்—இவர்கள் இன்று முன்வைக்கின்ற இதே தமிழுரிமையை சட்டரீதியாக வழங்குவதற்கு 1966ம் ஆண்டு சனவரி 8ம் நாள் தேசிய அரசாங்கம் தமிழ் மொழிச் சட்டப் பிரமாணங்களை கொண்டு வந்தபோது அதை எதிர்த்து—சுதந்திரக்கட்சியினருடன் சேர்ந்து 'தோசை, வடை, நல்லெண்ணெய்' ஊர்வலம் நடத்தி சிங்கள இனவெறியைத் தூண்டினார்கள்!

இவர்கள் இன்றைக்கு கூறுகின்ற பிரதேச சுயாட்சியை மாவட்ட சபை அமைப்பின் கீழ் வழங்குவதற்கு தேசிய அரசாங்கம் அன்று நடவடிக்கை எடுத்தநேரத்தில் 1966, 1967ம் ஆண்டுகளில் அதை எதிர்த்து சிங்கள இன வெறியை தூண்டி விட்டனர்!

தமிழ் பிள்ளைகளின் போதனாமொழி தமிழாகவே இருக்கவேண்டுமென்றும்—வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆட்சிமொழியாக தமிழ் இருக்கவேண்டுமென்றும் பாராளுமன்றத்திலும், பின்னர் அரசியல் நிர்ணய சபையிலும் தமிழரசுக்கட்சி கொண்டு வந்த தீர்மானங்களை எல்லாம் அரசுடன் சேர்ந்து எதிர்த்து வாக்களித்து தோற்கடித்தவர்கள் இந்தக் கம்யூனிஸ்டுகள்!

ஐக்கிய முன்னணியின் பொதுவேலைத் திட்டம் உருவாக்கப்பட்ட நேரத்திலும் சரி- புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டபோதும் சரி—தமிழுரிமைகள் பற்றியும் பிரதேச சுயாட்சி பற்றியும் காங்கேசன்துறையில் இன்று பேசும் கம்யூனிஸ்டுகள்—அவைகளில் இவற்றை புகுத்துவதற்கு எந்தவித முயற்சியையும் எடுத்ததில்லை!

முயற்சியெடுக்காதது மட்டுமல்ல — தமிழுரிமை சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை—தீர்மானங்களையெல்லாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்த்து வாக்களித்தவர்கள்—இந்தக் கம்யூனிஸ்டுகள்தாம் என்பதை தமிழினம் புரிந்து கொள்ள வேண்டும்!

தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்ற நினைக்கும் இந்த அரசியல் எத்தர்களுக்கு — இனத்துரோகிகளுக்கு — சந்தர்ப்பவாதிகளுக்கு — போலிப்பொதுவுடமைவாதிகளுக்கு —சமதர்ம தத்துவத்தையே கொன்றொழிக்கும் திரிபுவாதிகளுக்கு— [illegible]த்தின் கையாட்களுக்கு— காங்கேசன்துறைத் தொகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்கள் பெப்ரவரி 6ம் நாள் தலை அடிகொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்!

## தந்தை செல்வாவை ஆதரித்து நடைபெறும் பொதுக்கூட்டங்கள்

மூதறிஞர் தந்தை செல்வாவை ஆதரித்து காங்கேசன்துறைத் தொகுதியில் நாள்தோறும் மூன்று கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இக் கூட்டங்களில் தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்கள் உரையாற்றி வருகின்றனர். நடைபெறவுள்ள சில கூட்டங்களின் திகதிகளும், இடங்களும் வருமாறு!—

25—1—75 சனிக்கிழமை—அளவெட்டி தெற்கு, மாதகல் மேற்கு, வீமன் காமம் வடக்கு.

26—1—75 ஞாயிறு—வசாவிளான் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில்) மாரீசன் கூடல் இளவாலை, மாவிட்டபுரம் அரசடி, மடத்தடி.

27—1—75 திங்கட்கிழமை கொல்லங்கலட்டி சடச்சப்பை, ஊரங்குனை.

28—1—75 செவ்வாய்—குரும்பசிட்டி, தெல்லிப்பழை கிழக்கு, விராங்கொடை, இளவாலை வடக்கு, பெரிய கோவிலடி.

29—1—75 புதன்கிழமை தையிட்டிப்புலம் விழிசிட்டி, அளவெட்டி கிழக்கு, அம்பட்டாவத்தை, ஊறணி தையிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித் தமிழ் ஈழம் 35 இலட்சம் தமிழரையும் வாழ வைக்கும்!



''நாங்கள் தனித்தமிழ் ஈழம் கோருவது வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமல்ல — இலங்கையில் வாழும் 35இலட்சம் தமிழர்களையும் சுதந்திர மக்களாக வாழ வைக்கவே தமிழ் இனத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் சுதந்திரத் தன்னாட்சி கோருகின்றோம்! இதை கம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்கா புரிந்துகொள்ளட்டும்!

—இவ்வாறு காங்கேசன்துறைத்தொகுதியில் மூதறிஞர் செல்வாவை ஆதரித்து நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். அவர்மேலும் கூறியதாவது:-

''நாங்கள வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்காக மட்டுமே தமிழ் ஈழத் தன்னாட்சி கோருவதாக கம்யூனிஸ்ட் தலைவர் திரு. விக்கிரமசிங்கா ஒரு புதிய புலுடாவை போகுமிடமெங்கும் அவிழ்த்துவிட்டு வருகிறார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்காக மட்டும் நாங்கள் சுதந்திரம் கேட்கவில்லை. இந்நாட்டில் வாழும் 35 இலட்சம் தமிழ்பேசும் மக்களுக்காகவே சுதந்திரம் கேட்கிறோம்.

## விக்கிரமசிங்காவுக்கு நாவலர் பதில்!

நாம் விரும்பியபடி தமிழ் ஈழத்தன்னாட்சி, அமையுமாயின்—நமது தமிழ் ஈழம் 35 இலட்சம் தமிழர்களுக்கும் நிச்சயம் வாழ்வுகொடுக்கும்; தமிழ் மக்கள் வேறு யாரிடமும் கையேந்தி வாழும் நிலை இருக்காது.

''வடக்கு, கிழக்கு மாகாணங்கள் — தமிழ் ஈழம் —தனி நாடானல்—தெற்கிலே வாழும் 22இலட்சம் தமிழர்களின் கதியென்னவென்று கேட்கும் டாக்டர் விக்கிரமசிங்காவுக்கு சொல்வேன் — அந்த ஒரு நிலை ஏற்பட்டால், சிங்கள நாட்டில் வாழும் அத்தனை தமிழர்களுக்கும் ஈழத்தமிழ் நாடு வாழ்வு கொடுக்கும்!

''ஏழுகோடி மக்கள் கொண்ட பங்களாதேஷையும்—ஒரு கோடியே முப்பது இலட்சம் பேர் கொண்ட இலங்கையையும் ஒப்பிட்டுக் காட்டுவது தவறென்று கூறுகிறார் டாக்டர் விக்கிரமசிங்கா! அவருக்கு நான் சொல்வேன் ஒரு நாடு தனியாக உருவெடுப்பது அந்த நாட்டின் எண்ணிக்கை பலத்திலோ—பரப்பளவிலோ தங்கியிருக்கவில்லை!

நாம்கோரும் தமிழ் ஈழத்தைவிட —பரப்பளவிலும் மக்கள் எண்ணிக்கை பலத்திலும் மிகவும் குறுகிய நாடுகள் எத்தனையோ உலகில் தனித்து இயங்கும்போது 1833ம் ஆண்டுக்கு முன் தனித்து வாழ்ந்த தமிழ் ஈழம் மீண்டும் ஏன் தனித்துவாழ முடியாது''?

### அள்ளிவைத்தது . . .

—1-ம் பக்கத் தொடர்

பட்டவைதாம்1966ம் ஆண்டு சனவரி 8ல் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழிப் பிரமாணங்கள். இப்பிரமாணங்களுக்கு எவ்வகையிலேனும் அரசியல் சட்ட அந்தஸ்து கிடையாது என்று அரசியல் சட்டத்திலேயே திட்டவட்டமாக பொறிக்கப்பட்டுள்ளது.

அரசியல் சட்ட அந்தஸ்து மறுக்கப்பட்டுள்ள இத்தமிழ்மொழி பிரமாணங்கள் சாதாரண சட்டமாகவேயிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதே வேளையில் இப்பிரமாணங்கள் மூலச்சட்டத்துக்கு முரண்பட்டதென்றும் இவற்றை ஐக்கிய முன்னணி அரசு ஒருபோதுமே அமுல் நடத்தப்போவதில்லையென்றும் அரசியல் நிர்ணய சபையிலும், பாராளுமன்றத்திலும் முறையே அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வினும் — உண்ணாட்டு உள்ளூராட்சி பொது விவகார அமைச்சரும் நீதியமைச்சருமான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவும் ஒரு தடவைக்கு மூன்று தடவைகள் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றனர்.

இத்தமிழ் மொழிப் பிரமாணங்களை எதிர்த்தே — 1966ம் ஆண்டு சுதந்திர—சமசமாஜ கம்யூனிஸ்ட் ஐக்கியமுன்னணியினர் 'தோசைவடை நல்லெண்ணய்'என்று கேவலமான இன வெறியை கிளப்பி ஊர்வலம் நடத்தினார்கள் என்பதும் — அந்த தமிழ் விரோத — தமிழர் விரோத ஊர்வலத்தில் கலந்துகொண்டு சூடுபட்டுச் செத்த பௌத்த சிங்கள வெறியனை இரத்தினசாரா தேரோவுக்கு 1970ம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் கொள்ளுப்பிட்டியில் பீட்டர்கெனமனும், என். எம். பெரேராவும் சிறிமா அம்மையாருமாகச்சேர்ந்து பொதுமக்கள் கொடுத்த வரிப்பணத்தில் — அதாவது அரசின் செலவில்—நினைவுச் சின்னம் நிறுவி நினைவு மலரும் வெளியிட்டு பாராட்டினார்கள் என்பதும் கடந்த காலவரலாறு கூறுகின்ற உண்மைகள்.

இப்படி தமிழை புதைகுழிக்கு அனுப்பி தமிழ் விரோதிக்கு சிலை நிறுவியவர்களே காங்கேசன் துறை தமிழ் மக்களை ஏமாற்ற இப்போது வலைய வலைய வருகின்றனர்.

### தரப்படுத்தல் . . .

—7-ம் பக்கத் தொடர்

அனுமதியிலும் புள்ளிகள் வெளியிடப்படக்கூடாது?

திரு. துடாவை:- புள்ளிகளை உங்களுக்கு வேண்டுமானுல் காட்டுவோம்!

தங்கத்துரை!- எனக்கு காட்டுவதில் பிரயோசனம் இல்லை. பரீட்சார்த்திகள் அவற்றைபார்க்கவேண்டும்!

துடாவை!- அதற்கு நாங்கள் அனுமதிக்கமுடியாது!

(கல்வியமைச்சு மானியம் மீது 6-12-74ல் தேசிய அரசுப் பேரவையில் பேசியது.)

### ஆதரவாளர்களின் கூட்டம்!

காங்கேசன்துறை இடைத்தேர்தலில் விரிவான பிரசார வேலைகளில் ஈடுபடுவது குறித்து இறுதி திட்டங்களை தயாரிக்க கொழும்பிலுள்ள காங்கேசன்துறைத்தொகுதியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் 28—1—75ல்கொழும்பு-3 அல்பிறட்பிளேஸ், 26ம் இலக்க இல்லத்தில் கூடுகின்றனர்.

### வேலைவாய்ப்புக்...

—1-ம் பக்கத் தொடர்

பணங்களில் தமிழருக்கு வேலைவாய்ப்பு தரப்படுவதில்லை!

● மன்னாரிலுள்ள பேசாலையில் எண்ணெய்க் கிணறு தோண்டும் வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 100 பேரும் சிங்களவர்களே! இவர்களில் ஒருவர் கூடத் தமிழர் இல்லை! இது பற்றிக் கேட்டால் புதிய ஆட்களை எடுக்கவில்லை — கொழும்பு பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் சேவையிலிருக்கும் ஆட்களையே அனுப்பியிருக்கிறோம் என்கிறார்கள்,ஆனால் நடப்பது என்னவென்றால்— கொழும்பிலுள்ள கூட்டுத்தாபனத்திலிருந்து 100 சிங்களவரை பேசாலைக்கு அனுப்பிவிட்டு, காலியான அந்த 100 இடத்துக்கும் சிங்களவர்களையே நியமிக்கிறார்கள்! தமிழர்கள் தமிழ்ப் பகுதியில் உருவாக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் கூட வேலை வாய்ப்பு வழங்கப்படாமல் ஒதுக்கப்படுகின்றனர்!

● பேருந்து நடத்துனர் வேலைக்கு ஆட்கள் எடுக்கப்பட்டபோது, தமிழ்ப் பகுதியைப் பொறுத்தவரை ஒரு தொகுதிக்கு 5 பேர்கூட தெரிவு செய்யப்படவில்லை!

● எழுதுவினைஞர் வேலைகளுக்கு மாவட்ட ரீதியில் ஆட்களை எடுக்கிறார்கள். இதிலும் தமிழ் மாவட்டங்களான வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் சிங்களவர்களையும் வேலைக்கு எடுக்கிறார்கள் அதே நேரத்தில் சிங்கள மாவட்டங்களில் தமிழர்களை தெரிவு செய்வதில்லை.

—உடுவில் பா.உ.
வி. தர்மலிங்கம்.

### அரசியல் மடல்

3-ம் பக்கத் தொடர்

போட்டி! ஆணவத்திமிருக்கும், அஹிம்சை கொள்கைக்குமிடையிலான போட்டி! சிங்கள பௌத்த ஏகாதிபத்திய விஸ்தரிப்புவாதிகளுக்கும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துக்குமிடையே நடைபெறும் போட்டி! அவமானத்துக்கும் தன்மானத்துக்குமிடையே நடைபெறும் தர்ம யுத்தம்!

இப்போட்டியில் — கொத்தடிமைத்தனம், ஆதிக்கவெறி, சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசியல் சட்டம், சர்வாதிகாரம், பௌத்த சிங்கள ஏகாதிபத்திய விஸ்தரிப்பு — ஆகிய இவற்றின் பிரதிநிதியாகப்போட்டியிடும் வி. பி.க்கு காங்கேசன்துறைத் தொகுதி வாழ் என்னருமைத் தமிழ் மக்கள்—தங்கள் வாக்குச் சீட்டுக்களால் — தமிழ் மக்கள் மத்தியில் துரோகிகள் இனியும் தலையெடுக்கமுடியாதபடி தலையடி கொடுத்து தமிழ் ஈழத்தின் சுதந்திரக் குரலை தாரணி அறிந்திடச் செய்திடுவர்; தந்தைக்கு—தமிழ் ஈழத்தின் தலைமகனுக்கு மூதறிஞர் செல்வாவுக்கு ஈடிணையற்ற வெற்றியை தேடித்தந்திடுவர்—என்பதிலே யாருக்கும் எள்ளளவும் ஐயமுண்டோ?

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

### புதிய அரசியல் . . .

—7-ம் பக்கத் தொடர்

பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டும் திட்டமொன்றும்

நாடு நலம்பெற! சமூகம் முன்னேற!!
நமது குடும்பம் நன்கு வாழ!!!
உழைக்கும் நேரத்திற்கு எல்லை வகுக்காது
உழைப்போம்!

லீலா
பஞ்சாங்க
சித்திரக்
கலண்டர்
லீலா டயறி

சில வியாபாரத்தலங்களில் விற்று முடிந்திருக்கும். எனவே, லீலா கலண்டர் கிடைக்கவில்லையென வருந்தாமல் வேறு வியாபாரத்தலங்களில் தேடித்தேடிகேட்டுவாங்கி இல்லத்தில் தொங்கவைத்து ஒவ்வொரு நாளும் பயனடையுங்கள்.

இதோ —ஒரு பாராட்டு நன்றி

சிந்தனையில் அழுந்திப் பற் பல ஆராய்ந்து
சிறந்தனவும் மறைந்தனவும் மறந்த யாவும்
எந்தமதப் பெரியரது சால்பும் நாட்டின்
இயல்புகலை நாகரிகம் தொழில்விஞ் ஞானம்
தந்தனவும் தந்தசின்னத் துரைவேள் தோற்றம்
சான்றதிரு லீலா அச்சக நாட் காட்டி
வந்த பின்பு மற்றையநாட் காட்டிக் குண்டோ
வழக்கு?பெருஞ் செல்வர் அவர் வாழ்கநன்றே
—தொண்ட மண்டலாதீனம்

எங்கும் 'லீலா' என்று கேளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் சாசனம் சரியானது என்று வாதாட

# பொதுமேடை ஒன்றுக்கு பொன்னம்பலம் வருவாரா?

தமிழ் மக்கள் சோற்றுக்காக வாழுகிறார்கள்; அவர்கள் வெறும் சோற்றுப் பிண்டங்கள் என்ற முட்டாள் தனமான நினைப்பில் அரசியல் சாசனத்தை முன் வைத்து போட்டியிட முன்வர முடியாத திரு. வ. பொன்னம்பலம்—ஐந்து அம்சக் கொள்கை என்ற அர்த்தம் அற்ற—அரசால் அங்கீகரிக்கப்படாத — வெறும் கடதாசித்திட்டத்தை தமிழ் மக்கள் ஏற்று ஆதரிப்பார்கள்; அதன் மூலம் வெளி உலகுக்கு இலங்கை அரசியல் திட்டத்தை தமிழ் மக்கள் ஆதரித்து விட்டார்கள் என்று காட்டலாம் என்ற துரோக நினைவுடன் அரசின் பணப் பலம், படைப் பலம், அதிகார பலம், ஆணவபலம் அனைத்தையும் தனதாக்கிக் கொண்டு காங்கேசன் துறைத் தொகுதியில் போட்டியிடுகிறார்.

தமிழ் மக்களுக்கு அரசு சகல துறைகளிலும் இழைத்து வரும் அநீதிகளையும் அடக்கு முறைகளையும் தகுதியான தமிழ் மாணவர்கள் உயர் கல்வியில் இருந்து தரப்படுத்தல் மூலம் புறக்கணிக்கப்படுவதையும் பொருளாதார அபிவிருத்தியில் தமிழ் பிரதேசம் ஒதுக்கப் படுவதையும் திரு. வ. பொன்னம்பலம் மறுக்க முடியுமா?

காங்கேசன் துறையில் துறைமுகம் கட்டவேண்டி அதற்கான இயந்திர உபகரணங்களும் கொண்டு வரப்பட்ட பின் இன்றைய அரசால் அத்திட்டம் கைவிடப்பட்டதை திரு. வ. பொன்னம்பலம் மறுக்க முடியுமா?

புதிய அரசியல் சாசனத்தில் கத்தோலிக்க, இந்து, இஸ்லாமிய மக்களுக்கு மத சுதந்திரம் இல்லை என்பதை திரு. வ. பொன்னம்பலம் மறுக்க முடியுமா?

இந்த அரசியல் சாசனம் சரியானது என்று வாதிடப் பொன்னம்பலத்தால் முடியுமா?

திரு. வ. பொன்னம்பலம் அவர்களே! தமிழ் மக்களை குறிப்பாக காங்கேசன் துறைத் தொகுதி வாக்காளர்களை மந்தைக் கூட்டம் என்று நினைத்து விடாதீர்கள்! அவர்கள் உங்களுக்கும் உங்கள் அரசாங்கத்துக்கும் தக்க பதில் தரக் காத்திருக்கிறார்கள்.

பெரும்பான்மைத் தமிழர் சிறுபான்மைத் தமிழர் என்ற பேதமை இல்லாமல் சாதி வேறுபாடு இல்லாமல் தமிழன் ஒன்று பட்டு விட்டான் என்ற நிலை ஏற்படுமானல் அது சிங்கள அரசாங்கங்களுக்கு பெரும் தலையிடியை கொடுக்கும்; தமிழ் மக்களும் தமது அரசியல், பொருளாதார, சுதந்திரங்களை அடைந்து விடுவார்கள்; ஆகவே தமிழ் இனத்தை இரண்டு கூறுகளாக பிரித்து ஆட்சி செய்வது தமக்கு சுலபமாக இருக்கும் என்று கருதிய சிங்கள ஏகாதிபத்தியம், சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியாக திரு. எம். சி. சுப்பிரமணியம் அவர்களை தரகராக நியமித்திருக்கிறது. அரசின் செல்லப்பிள்ளையாக சுகபோக வாழ்வு வாழும் திரு. சுப்பிரமணயம் அவர்கள் கடந்த ஐந்து வருடங்களில் சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்று அரச பேரவையில் என்றுவது ஒரு பிரேரணையை கொண்டு வந்தாரா? புதிய அரசியல் திட்டம் தயாரிக்கும் வேளையில் சாதி வேறுபாடு காட்டுவது தண்டனைக்குரிய குற்றம் என்று ஒரு சரத்து சேர்க்கப்பட வேண்டும் என்று வாதாடினாரா?

மரவரி மூலம் வாழ்க்கை நடாத்திய ஏழைத் தொழிலாளரின் வாழ்வில் மண் போட்டுகூட்டுறவு முறையை தமிழ் அரசுக்கட்சி எதிர்த்த போது அரசாங்கத்துடன் சேர்ந்து மரவரி முறையை ஒழித்துக்கட்ட இவர்கள் வாக்களிக்கவில்லையா?

சாதிபார்ப்பது தண்டனைக் குரிய ஒரு குற்றம் என்று அரசியல் சாசனத்தில் சரத்துகள் சேர்க்கப்பட வேண்டுமென்று தமிழ் அரசுக்கட்சி பிரேரணை கொண்டு வந்தபோதுகூம் யூனிஸ்டுகள் அதை எதிர்த்து அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களிக்க வில்லையா?

சாதிவேறுபாடின்றி தமிழ் இனம் ஒன்றுபடுவதை நீர் விரும்புவீரா? சாதி அமைப்பு இல்லாவிட்டால் உங்களுக்கு நட்டம் என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

இவைகள் அனைத்தையும் பொது மக்கள் முன் விவாதிக்க ஒரு பொது மேடைக்கு உங்களால் வர முடியுமா?

உங்கள் அரசியல் தத்துவம் உலக ரீதியாகவும் இலங்கை ரீதியாகவும் சரிந்து வருகிறது என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

ஆசீர்வாதம் ஹென்றி (ச. நீ.)

(சுன்னாகம்ப. ப. ச. உறுப்பினர்)

# தோழர் வானுப்போனுவின் முற்போக்கு சந்தி சிரிக்கிறது!

கொழும்பு சென்ற் ஜோசப் கல்லூரியின் முன்னுள் அதிபரான சகலஞ் சென்ற வணக்கத்துக்குரிய பிதா லெக்கொக் அவர்களுக்கு காமினிபடமாளிகை முன்னுள்ள டாலி வீதிச் சந்தியில் வைத்துச் சிலை நிறுவ ஏற்பாடு செய்திருந்தனர், அனுமதி பெறவேண்டிய இடங்களில் அனுமதிபெற்று சிலையை வைப்பதற்கான பீடமும் அமைக்கப்பட்டாயிற்று. இது நடைபெற்றது காலஞ் சென்ற பண்டார நாயகா புதிதாகப் பதவிக்கு வந்திருந்த 'அப்பே ஆண்டுவ' காலத்தில்.

## "அப்பே ஆண்டுவ" முற்போக்கா?

நாடு பூராவும் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த பெளத்த மதவெறியும் சிங்கள வகுப்பு வாதமும் காட்டாட்சி நடத்திய நேரம் அது.

சிங்கள வகுப்புவாதிகள் தியாகி கந்தசாமியின் சிலையைக் கொல்லனுவையில் பிடுங்கி எறிந்தார்கள். புத்தர் சிலையை அதில் அமர்த்தினார்கள்.

பெளத்த வெறியர்களோ லெகொக் அடிகளாரின் சிலையை வைப்பதற்காக நிறுவப்பட்ட பீடத்தில் அன்னாரின் சிலை வைக்கப்படு முன்பாகஇரவோடு இரவாக புத்தரின் சிலையை வைத்துச் சென்றனர்.

## தியாகி கந்தசாமியின் சிலை எங்கே?

நாட்டில் நல்லாட்சி நடைபெற்றிருக்குமானல் மேற்படி சதி விசாரிக்கப்பட்டிருக்கும் சதிகாரர் தண்டிக்கப்பட்டிருப்பர். இனப் பூசல் மதப் பூசல் தவிர்க்கப் பட்டிருக்கும் புத்தர் சிலைகள் அகற்றப்பட்டு வண. லெக்கொக் சிலையும் தியாகி கந்தசாமி சிலையும் இருந்திருக்க வேண்டிய இடங்களில் இடம் பெற்றிருக்கும். காலஞ் சென்ற பண்டாரநாயக்காவின் முற்போக்கு அரசாங்கமோ அநியாயத்தைக் காண மறுத்து தனது கண்களை மூடிக்கொண்டு பாரமுகமாக இருந்தது. முறைகேடாக வைக்கப்பட்ட புத்தர் சிலைகள் வெய்யிலாலும், மழையாலும் சேதமடையாது காப்பதற்காகக் கூரையிட்டுத் தந்தது. அவற்றை அங்கிருந்து அகற்றிவிடாதிருக்க முள் வேலியும் போட்டு அங்

நாளில் பொலிஸ் காவலும் போட்டது.

இத்தகைய கத்தோலிக்க தமிழ் விரோதியான பண்டாரநாயக்கா கொள்கைகள் வ. பொ. வுக்கு முற்போக்காகத் தெரிகின்றன. காமாலைக் கண்ணனுக்கு எல்லாம் மஞ்சளாகத்தான் தெரியும். அது அவன் குற்றம் இல்லை நோயின் குற்றம்.

1958 இல் சிந்தப்பட்ட தமிழர் இரத்தமும், நான்காவது உலகத் தமிழ் மாநாட்டு உயிர்ப்பலிகளும் தோழருக்கு புரட்சி அமைத்துவிட்ட அடையாளங்கள் தோழர் புளகாங்கிதம் அடையத்தான் செய்வார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சொல் அனுதாபம் கூறுர். அவர் தான் முற்போக்கு வாதியாச்சே! முற்போக்குப் பூனைகள் கொண்டாட தமிழ்ச் சுண்டெலிகளுக்கு - சிறுபான்மைக் கத்தோலிக்கருக்கு சிவமோசம் வராமல் எப்படி? மாஸ்கோ கழுவிய மூளை இப்படிச் சிந்திக்கிறது.

"லெகொக் அடிகளாருக்கு புனித யோசேப் கல்லூரி வழலில் சிலை வைத்தால்— தியாகி கந்தசாமிக்கு யாழ் நகரில் ஒரு தெருவின் பெயரை மாற்றிவிட்டால்— தோழர்களது வகுப்புவாதம் பிறருக்குத் தெரியாமல் உலகு இருண்டுவிடும்."

இப்படியாக கச்சேரி—நல்லூர் வீதியில் "தியாகி கந்தசாமி" வீதியென்று கடதாசி அட்டையில் பெயர் மாற்றம் செய்திருந்த அரசாங்க லிகிதர் சங்க உறுப்பினர் கச்சேரிமுன் சூழ்நின்று ஆர்பரிக்க நியமனப் பத்திரம் தாக்கல் செய்தவர் தானே தோழர் வ. பொ.

கொலனுவையில் தியாகியின் சிலையை இருந்த இடத்தில் நிறுவ முடியாத வ. பொ. தானு லெகொக் அடிகளாரின் சிலையை டாலி வீதியில் நிறுவ முடியாத வ. பொ. தானு தமிழ் சமுதாயப் பிரச்சினைகளை வென்றுதரப் போகிறார்.?

# பொதுவேலைத் திட்டமா? ஐந்து அம்சத் திட்டமா? சதித் திட்டமா?

காங்கேசன் துறை மக்கள் எப்படிச் சிந்திக்கவேண்டிய கட்டத்திலிருக்கின்றார்கள் என்பதைப் பற்றிச் சிந்தித்தல் பொருத்தமானதாகும்.

ஒரேவார்த்தையில் சுருக்கமாகக்கூறுவதானல் சிங்கள, இனவாத, முதலாளித்துவ, சுரண்டலிச, நழுவலிச வாதிகளால் ஒரு பிரிவு மக்கள் அவர்கள் பேசும் மொழிரீதியாகநசுக்கப்படுகின்றார்கள். யார் எந்தவிதமாக நியாயத்தைப் பேசக் கற்றுக்கொண்டாலும் இந்த உண்மையை மறுக்கவும் முடியாது. மழுப்பவும் முடியாது. இந்த நசுக்கப்படும் நிலைபற்றி அதுவும் புதிதாக எடுத்து இங்கேகூறுவதற்கில்லை. எல்லாம்பேசிப் பேசி வாய் ஓய்ந்த கேட்டுக் கேட்டு காது புளித்தவைகள் தான்.

எனினும் இங்கு நடைபெறும் இப்போட்டியை ஒரு வெறும் அரசியல் கண்ணேடு மட்டும் நோக்குதல் பொருந்தாது. கம்யூனிசம் தேவையா? சோசலிசம் போதுமா,? செல்வநாயகம் நல்லவரா?,பொன்னம்பலம் திறமைசாலியா,? தமிழரசு சாதித்தது என்ன? என்ற கேள்விகளையெல்லாம் சுருட்டிப் பொதுத்தேர்தலின் போது பாவிப்பதற்கென்று வைத்துவிட்டு, இப்போது நாமாக வலிந்து சென்று கேட்டுப் பெற்றுக் கொண்ட சிறப்பான சந்தர்ப்பத்தை எமது சிறப்பான நோக்கத்திற்காகவே பாவித்தல் சிறப்

சிறப்பாக கவனிக்கவேண்டிய விடயம் எதுவென்பதையும் மீண்டும் மீண்டும் கூறத் தேவையில்லை.

பொருளாதாரத்தில் சமத்துவம் ஏற்பட்டு விட்டால் அதன் பின் மொழிப்பிரச்சினை இருந்த இடம்தெரியாமல் போய்விடும், என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள் இப்போது மொழி, பிரதேச உரிமைகள் என்றெல்லாம் பேச முற்பட்டு ஐந்து அம்சட்திட்டத்தையும் கட்சிமாவட்டத்தில் ஏற்றுக்கொண்டிருப்பது என்னகோளாறு? குழறுபடி? என்று சிந்திக்கவேண்டும். பொருளாதார சமத்துவம் ஏற்பட்டாலும் மொழியுரிமைக்கு ஆபத்துத்தான் என்பதை உணர்ந்தா? இல்லை பொருளாதார சமத்துவத்திற்குப் பாடுபாடும் தம் முயற்சியைச் சிறிதுசிறிதாக (தங்கள் கூட்டாளிகளான தேசிய முதலாளிகளுடன் சேர்ந்து) கைவிட்டுவிட்டு, தாமும் முதலாளிகள் வரிசையில் குந்திக்கொள்ளும் நோக்கமா? இதை வாக்காளர்கள் சிந்திக்கட்டும்.

அடுத்ததாக, பொது வேலைத்திட்டத்தையே அவமதித்து உதறித்தள்ளிவிட்டுத் தன்னிச்சையாக தொழிற்பட முயற்சிக்கிறது என்று இடதுசாரிகளாலேயே வர்ணிக்கப்படும் பெரும்பான்மைச் சு[illegible] கட்சி, தானும் த[illegible] அடுத்த தம்பியாராகிய சமசமாசக் கட்சியும் ஏற்றுக் கொள்ளாததும் வெறும் கட்சி மட்டத்தில் கம்யூனிஸ்டுகள் மட்டும் ஏற்றுக் கொண்ட (மனதாரத்தானு?) துமான ஒரு திட்டத்தை அமுல் நடத்த முன்வரமுடியுமா? முடியுமென்று ஒரு வாதத்திற்கு வைத்துக் கொண்டாலும்,

(1) இதுவரை ஐந்து அம்சத்திட்டத்தைநிறைவேற்றி ஏன் காட்டவில்லை.

(2) பொருளாதார சமத்துவம் ஏற்படாவிட்டாலும் ஐந்து அம்சத் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் மொழி, பிரதேச உரிமைகள் நிலை நிறுத்தப்பட முடியுமென்று திரு. பொன்னம்பலம் ஏற்றுக்கொள்ளுகின்ருரா?

அல்லது—

கம்யூனிசம் வரும்வரை மொழியுரிமைக்காகக் காத்திருக்கத்தேவையில்லையா?

இரண்டும் இல்லையாயின் முன்னுக்குப் பின் முரணை இந்தக் குதம்பல் வாதம் எதற்கு?

முப்பத்தைந்து இலட்சம் மக்களின் குரலைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒருவரைத் தெரிந்தெடுப்பதற்கு இந்த முப்பத்தைந்து இலட்சம் மக்களும் தெரிந்தெடுத்திருப்பதுகாங்கேசன் துறை மக்களைத்தான் என்பதை காங்கேசன் துறை வாழ் மக்கள் உணரவேண்டும்.

[illegible] டுப் பேச்சென்றால் பொது வேலைத்திட்டம் என்னுச்?

—நீரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'தரப்படுத்தல் தமிழ் மாணவருக்கெதிரான அக்கிரமம்!'

—தங்கத்துரை

# 'அதில் எவ்வித பாரபட்சமும் அறவே கிடையாது!'

—கம்யூனிஸ்ட் பா. உ. துடாவை

"ஐக்கிய முன்னணி அரசாங்கம் பின்பற்றிவரும் மொழி அடிப்படையிலான தரப்படுத்தல் மூலம் இந் நாட்டிலுள்ள தமிழ் மாணவர்களுக்கெதிராக கடைந் தெடுத்த பாரபட்சக் கொள்கையை இந்த அரசு கடைப் பிடித்து வருகிறதென்று நான் குற்றம் சாட்ட விரும்பு கிறேன்.

தமிழ் மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பதில் அரசு பின்பற்றி வரும் பல்வேறு இனப்பாரபட்சக் கொள்கைகளை புள்ளி விபரங்களுடன் அம்பலப்படுத்தி மூதூர் தேசிய அரசப் பேரவை உறுப்பினர் திரு. அ. தங்கத்துரை ஆற்றியஉரை முழுவதையும் இங்கு தருகிறோம்.

இத்தகைய மொழி அடிப்படையிலான தரப்படுத்தல் கொள்கை, உலகில் எந்த ஒரு நாட்டிலுமாவது இது வரை பின்பற்றப்பட்டதொன்றல்ல! கனடாவில் இது பின்பற்றப்படுவதாக நீங்கள் கூறலாம். ஆனால் கனேடிய தூதரகத்துடன் நாங்கள் தொடர்புகொண்டு கேட்டபோது—அங்கும் இத்தகைய முறை பின்பற்றப் படுவதில்லையென்று அவர்கள் எங்களிடம் கூறினர்கள்!

உங்கள் தரப்படுத்தல் கொள்கை மூலம் தென் ஆபிரிக்காவிலிருக்கும் சிறுபான்மை வெள்ளையர்களுக்கும் ருடீசியர்களுக்கும் நீங்கள் புதியதொரு வகுப்புவாத பாரபட்சத் திட்டத்தை கற்றுக்கொடுக் கிறீர்கள்! மிகவும் இழிவான இன ஒதுக்கல் கொள்கையை இதிலே நீங்கள் கடைப்பிடிக்கிறீர்கள்!

மொழியடிப்படையிலான தரப்படுத்தல் ஒன்றின் மூலமாக மட்டுமே தமிழ் மாணவர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாக பலர் நினைக்கிறார்கள். அத்தோடு மட்டும் இந்தப் பாரபட்சம் நிற்பதில்லை. பல்கலைக் கழகங்களுக்கு மாவட்ட அடிப்படையில் அனுமதி வழங்கும் கொள்கையை இந்த அரசு அமுல் நடத்துவதன் மூலம், தமிழ் மாணவர்கள் உயர் கல்வி பெறுகின்ற வாய்ப்புக்கள் மேலும் பறிக்கப்படுகின்றன.

### மாவட்ட அடிப்படை

"இந்நாட்டில் ஜீ. சி. ஈ. உயர்தர வகுப்புக்களில் விஞ்ஞானத்துறையில் பயிலும் மாணவர்களின் தொகை ஏறத்தாழ 11,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் ஏறத்தாழ 1000 மாணவர்களே பல்கலைக் கழகங்களின் விஞ்ஞானத் துறைக்கு தெரிவு செய்யப்படுகின்றனர்! ஆனால் இதன் மூலம் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புக்கள் பெருமளவு பறிக்கப்பட்டிருக்கின்றன. ஆக 37 தமிழ் மாணவர்களுக்கு ஒருவரே உயர் கல்வி வாய்ப்பை இந்த மாவட்ட அடிப்படை மூலம் பெற முடிகிறது.

37 தமிழ்மாணவர்களுக்கு ஒரு தமிழ் மாணவரே தெரிவு செய்யப்படும் அதே வேளையில் சிங்கள மாணவர்களைப் பொறுத்தவரை — நுரளை மாவட்டத்தில் நான்கு பேருக்கு ஒருவரும், கண்டி மாவட்டத்தில் பத்துப் பேருக்கு ஒருவரும், காலி மாவட்டத்தில் 19 பேருக்கு ஒருவரும், 28.7 விதமான மாணவர்களில் ஒருவர் கொழும்பு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்படுகின்றனர், இதைக் கவனிக்கும் போது — பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்படுவதில் தமிழ் மாணவர்களுக்குரியவாய்ப்புக்கள் மேலும் பறிக்கப்படுகிறது!

### உயர்தரப் பரீட்சையில் நடக்கும் தில்லு முல்லு

இது மாத்திரமன்றி தமிழ் இளைஞர்களுக்கு எதிராக மேலும் பாரபட்சம் காட்டப்படுகிறது. ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில், புள்ளிகள் தரப்படுத்துவதற்கு மர்மமான ஒரு முறையைப் புகுத்தி—தமிழ் மாணவர்களுக்கு எதிராக் குறுகிய பாரபட்சம் காட்டி வருகிறீர்கள்!

இது எப்படி என்பதை தான் விளக்கப்படுத்து கிறேன். உயர்தரப் பரீட்சையில் சாதாரண சித்தியடைய ஒரு தமிழ் மாணவன் 55 புள்ளிகள் எடுக்க வேண்டும். 55 முதல் 64 புள்ளிகள் வரை அவனுக்கு சாதாரண சித்தி தரப்படுகிறது. இது "S" என்று அழைக்கப்படுகிறது. 65 முதல் 74 வரை விசேட சித்தி (C) பெறுகிறான், 75-85 வரை அவனுக்கு "B" இடம் தரப்படுகிறது. 85 முதல் 100 வரை அவன் 'A' பிரிவுக்குள் வருகிறான்.

அதே வேளையில் சிங்கள இளைஞன் ஒருவனின் புள்ளிகள் பின்வருமாறு வகைப் படுத்தப்படுகிறது. O—34 வரை 'F'—35 முதல் 50வரை 'S'—51 முதல் 60 வரை 'C' —61 முதல் 74 வரை 'B' —75 முதல் 100 வரை 'A'!

### பாரபட்சம்

தமிழ் மாணவர்களுக்கு எவ்வாறு பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை நான் இப்போது விளக்கப்படுத்துகிறேன்—

கல்வி அமைச்சரின் அறிக்கையின்படி நான்கு பாடங்களிலும் கட்டாய சித்தியடையவேண்டிய பொறியியல், பிரயோக விஞ்ஞானம் ஆகிய இரண்டு துறைகள் தவிர்ந்த ஏனைய துறைகளுக்கான — பல்கலைக்கழக அனுமதி, ஜீ. சி. ஈ. உயர் தரத்தில் ஆகக் குறைந்தது 3 பாடங்களில் சித்தியும் 4வது பாடத்தில் ஆக குறைந்தது 25 விதமான புள்ளியும் எடுத்தவர்களுக்கே வழங்கப்படுகிறது.

எனவே, சாதாரண சித்தியடைவதற்கு தமிழ் மாணவர்கள் எடுக்கவேண்டிய ஆகக்குறைந்த புள்ளியை 55 ஆக்கியதன் மூலம்—தமிழ் மாணவர்களின் பல்கலைக் கழக கல்வி வெட்டிச்சாய்க் கப்படுகிறது.

இவ்வகைத் தரப்படுத்தல் பரீட்சைத் திணைக்களத்தால் பின்பற்றப்படுகிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது. வழமையாக மறுமொழித் தாள்கள் ஒரு வருடம் கழித்தே அழிக்கப்படுவது வழக்கம். ஆனால் திடீரென சகல மறுமொழித் தாள்களும் ஒரு வருடத்திற்குள் அழிக்கப்பட்டு விட்டதை நாங்கள் காணுகிறோம்!

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் பகுதியினர் (central agency for university admission) பல்கலைக்கழக அனுமதியை மூடி மறைத்து— ஒரு இரும்புத்திரையை—ஒரு இரகசிய மூடியை எதற்காக வைத்திருக்கின்றனர் என்பது எனக்கு விளங்கவில்லை!

திரு. துடாவை (கம்யூனிஸ்ட்):— எவ்வித இரும்புத் திரையும் கிடையாது!

தங்கத்துரை:— இந்த அரசாங்கம் சோசலிசத்தில் உண்மையிலேயே அக்கறையுள்ளதாக இருந்தால் பாரபட்சங்கள் எந்த வடிவில் இருந்தாலும் அவற்றை அகற்றநடவடிக்கையெடுக்க வேண்டும்!

திரு. துடாவை (கம்யூனிஸ்ட்) :- எந்த வகையான பாரபட்சமும் எள்ளளவும் கிடையாது!

தங்கத்துரை:- பாரபட்சம் எங்கேயிருக்கிறதென்று



தான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருக்கிறேன். உதாரணத்துக்கு—தமிழ் மாணவர்களின்புள்ளிகளை வலோத்காரமாக குறைப்பது பாரபட்சம் என்பதை உங்களால் மறுக்கமுடியுமா?

பரீட்சைப் பகுதி ஒவ்வொரு மாணவனும் எடுக்கும் புள்ளிகளை எதற்காக பகிரங்கமாக வெளியிடக் கூடாது? போட்டிப் பரீட்சையின் ஒவ்வொரு மாணவனும் பெறும் புள்ளிகளை Central Agency ஏன் பகிரங்கமாக வெளியிடக்கூடாது? இலங்கை நிர்வாக சேவை, கணக்காளர் சேவை ஆகியவற்றின் பரீட்சைகளில் புள்ளிகள் வெளியிடப்படுவது போல — ஏன் பல்கலைக்கழக

—5-ம் பக்கம் பார்க்க

# புதிய அரசியல் சட்டத்தை காங்கேசன் மக்கள் நிராகரிக்க வேண்டுமென்று ஏன் கூறுகிறோம்!

சிங்களம் மட்டும் சட்டத்தின் உள்நோக்கமோ தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களை மட்டுமன்றி தமிழர் எல்லோரையும் படிப்படியாகச் சிங்களம் படிக்கச்செய்து ஒரு பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதே. இந்த திட்டத்தை இன்று சிங்களக் கட்சிகள் எல்லாமே—தமிழுக்கு சம உரிமைபெறப்போராடிய கட்சிகள் உட்பட — ஏற்றுக்கொண்டன. இத்திட்டத்தை மையமாக வைத்தே புதிய அரசியலமைப்பு வரையப் பட்டது. இதனாலேயே தமிழரின் ஒத்துழைப்பை பெறுவதற்கு அரசாங்கம் சிறிதும் முயலவில்லை.

அரசியல் சட்டத்திலிடம் பெற்றுள்ள சிங்களம் மட்டும் சட்டம் உணவு நிறைந்த பொன்வட்டில். உணவு இல்லாத மண்வட்டில் தான் அதில் இடம் பெற்றுள்ள 1958ம் ஆண்டின் தமிழ் மொழிச் சட்டம்! புதிய அரசியலமைப்புஉணவுநிறைந்த பொன்வட்டிலை சிங்கள மக்களுக்கு கொடுக்கிறது; காலியான வெறும் மண்வட்டிலை தமிழ் மக்களுக்குக்கொடுக் கிறது.

புதிய அரசியலமைப்பில் புத்த சமயத்தை மட்டுமே தனித்துப்பர்த்தி போற்றுவது என்பதும், வேறு எந்த மதத்தையும் குறிப்பிடுவதில்லை. யென்பதும், சிங்களத்துக்கு மட்டுமே தனியிடங்கொடுப்பது என்பதும்தமிழ்மொழிக்குரிய இடங்கொடுப்பதில்லையென்பதுமே இந்த அரசாங்கத்தின் வடிகட்டின வகுப்புவாத சர்வாதிகார நயவஞ்சகக் கொள்கை யென்பதை யாவரும் எளிதில் அறியலாம்!

புதிய அரசியல் சட்டத்தின் படி—

1. சாதாரண சட்டமான சிங்களம் மட்டும் சட்டம் அரசியலமைப்பில் ஒரு பகுதியாக இலகுவில் மாற்ற முடியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது.

2. சிலரை ஏமாற்றுவதற்காகப் பிரமாணங்களின்றி இயங்காத தமிழ் மொழிச் சட்டம் உயிர் போன பிணமாக்கப்பட்டு அரசியலமைப்பில் சேர்க்கப் பட்டுள்ளது.

3. "நடைமுறைப்படுத்த மாட்டோம்" என்று அரசாங்கம் பலமுறை வற்புறுத்திக் கூறிய 1966ம் ஆண்டின் தமிழ் மொழிப் பிரமாணங்கள், அரசியல் அமைப்பின் ஒரு பகுதியாகாது; ஒரு சாதாரண துணைச் சட்டம்தான் என்ற குறிப்புடன் சிங்களத் தீவிரவாதிகளின் சந்தேகத்தை நீக்கும் பொருட்டு இப்பிரமாணங்கள் திருத்தமாக அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

4. சிங்களமே இந்நாட்டு நீதி மன்றங்களின் பேச்சு மொழியும் [illegible] மொழியும் என்று அரசியலமைப்பில் உறுதிசெய்யப் பட்டுள்ளது:

5. தமிழ்ப் பகுதிகளில் தானும் தமிழ் பதிவேட்டு மொழியாயிருக்கும் என்பதைக்கூட அரசியலமைப்புக் கூறவில்லை!

6. சிங்களத்திலேயே சட்டங்கள் ஆக்கப்படும் என்று தனிப்புது உரிமை சிங்கள மொழிக்கு அரசியல் அமைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

கா. பொ. இரத்தினம் பா. உ.

7. தமிழ்மொழியில் சட்ட மொழி பெயர்ப்பே கொடுக்கப்படுமென்று அரசியலமைப்பில் கூறித்தமிழ்மக்கள் மீது அடிமை முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது.

வசதியாய் இருந்தால் விரும்பினால் அரைகுறைத் தமிழ் மொழிபெயர்ப்பைக் கொடுத்துச் சமாளித்துவிட்டுத் தமிழரைச் சிங்களம் படிக்கச்செய்து, பின் தனிச் சிங்களத்தில்தமிழரைஆட்சி செய்யலாம் என்று ஆளும் கட்சியினர் தொடர்ந்து கூறிவரும் கொள்கைக்கு ஏற்பவே இந்த அரசியலமைப்பு ஆக்கப்பட்டுள்ளது.

சில சலுகைகளைக் கொடுத்துத் தமிழர் சிலரைக் கைப்பொம்மைகளாக்கி அவர்களின் பாராட்டுக்களுடன் தமிழ் மொழி உரிமைகளைப் பறித்துத், தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சிதைத்து, அவர்களை அடிமைகளாக்கிச் சிங்களத்தைத் தமிழ்ப் பகுதிகளிலே ஆட்சிமொழியாக்கிப் படிப்படியாகத் தமிழர்களைச் சிங்களவர் ஆக்குவதற்கு ஆளுங்கட்சியினர் சமதர்மம் என்ற போர்வையில் வகுத்துள்ள சூழ்ச்சித் திட்டமே இந்த அரசியலமைப்பு. இதனாலேயே இந்த அரசியலமைப்பைத் தமிழினக் கொலைக்கு வழிவகுக்கும் தமிழரின் அடிமைச் சாசனம் என்கிறோம்.

இந்த அரசியலமைப்புத் தமிழரின் அடிமைச் சாச

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் குழிபறிப்பு!
# பல்கலைக்கழகம் நிறுவிட தடை விதிப்பு!
# யாழ்ப்பாணக் கல்லூரியோ சுவீகரிப்பு!
# வெளிநாடு செல்வதற்கு செலாவணி மறுப்பு!

- பல்கலைக் கழகத் தெரிவில் தரப்படுத்துதல், மாவட்டத் தெரிவு ஆகிய பாரபட்சக் கொள்கைகளைப் புகுத்தி தமிழ் மாணவர்களைப் புறக்கணித்தும்,—
- இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் மூலம் எவரேனும் அல்லது எந்தத தாபனமேனும் பல்கலைக் கழகமொன்றை நிறுவவோ பட்டங்களை வழங்கவோ தடை விதித்தும்—
- யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிப் பிரிவைச் சுவீகரித்து, மூடுவிழா நடாத்தியும்—
- வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பயில விரும்பும் தமிழ் மாணவர்களுக்கு அந்நியச் செலாவணி வழங்க மறுத்தும்—

## தமிழ் மாணவனே துடித்தெழு! அக்கிரம ஆட்சியின் பாதந்தாங்கிக்கு வோட்டால் வைத்திடு வேட்டு!

தமிழ் மாணவர்களின் கல்வியைப் பறித்தெடுக்கும் திட்டமிட்ட ஒரு சதித்திட்டத்தில் அரசு இறங்கியுள்ளது. ஆசுவேசமய நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள், தொழில் சங்கங்கள், சமூக சேவை மன்றங்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் அனைத்தும் அழைக்காது அரசாங்கத்தின் மேற்கண்ட இனப் பாரபட்சங்களுக்கு எதிராக திர்மானங்கள் நிறைவேற்றுவது, ஆகியவற்றின் மூலம் அரசின் பாரபட்சக் கொள்கைகளை கைவிட நிர்ப்பந்திக்குமாறு இம் மாநாடு கேட்டுக்கொள்கின்றது.''

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை, தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளை, ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய மாநாட்டில் 22-1-75 அன்று மேற்கண்ட திர்மானம் நிறைவேற்றப்பட்டது மாநாட்டிற்கு திரு.மு.திருச்செல்வம் கியூ. ஸி.தலைமைதாங்கினர்!

கல்வித்துறையில் இத்தகைய பல்வேறு அநீதிகளாலும் பாதிக்கப்பட்டு குமுறியெழுந்துள்ள தமிழ் மாணவர்கள் — சீறும் சிறுத்தைகளாக — அடிப்பட்ட புலிகளாக — காங்கேசன்துறையில் அக்கிரம ஆட்சியின் பிரதிநிதியாகப் போட்டியிடும் வ. பொ. வுக்கு பட்டை நாமம் சாத்திட தயாராகி வருகின்றனர்.

### தேவை

சுதந்திரன் வெளியிடுகளை விற்பனை செய்ய நாடு முழுவதும் பிரதிநிதிகள் தேவை. டிப்பாஸிட் பணமாக ரூபா 500-00 செலுத்தக்கூடியவர்கள் விண்ணப்பிக்கவும்.

சுதந்திரன் வெளியீட்டகம் 194ஏ, பண்டாரநாயகவீதி, கொழும்பு-12.

### பாரதி சனசமூக நிலையத்தில் கவிஞர் காசி ஆனந்தன்

கட்டுவன் தெற்கு பாரதி சனசமூக நிலைய ஆண்டுப் பொதுக்கூட்டம் 31—1—75 வெள்ளிக்கிழமை மாலை 6 30 மணிக்கு நிலைய முன்றல் வெளியில், நிலையத் தலைவர் தலைமையில் நடைபெறும்.

தமிழர் கூட்டணிப் பிரமுகர் பலர் இக் கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்துவர்.

நிலையத்தினால் நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை, நாவன்மை, நாடகப் போட்டிகளில் முதலிடம் பெற்றோர்க்குரிய சிறப்புப் பரிசில்கள் நிலையத்தில் சார்பாகத் தமிழ்த் தியாகச் செம்மல கவிஞர் காசி ஆனந்தன் வழங்கி பரிசில் வழங்கல உரையும் நிகழ்த்துவார்.


### வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க!

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 15 அல்லது, மில்க்வைற் பார்சோப் மேலுறைகள் 2 அனுப்பி ஓர் அழகிய திருவள்ளுவர் படத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

3வது ஜனத்திரள் வாரமாக

**கிங்ஸ்லி லிடோ** (யாழ் நகர்)

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி மக்களின் நன்மதிப்பை பெற்ற வண்ணச் சித்திரம்.

ஜெமினி,
கே. ஆர். விஜயா,
ராஜன்,
சௌகார் ஜானகி,
முத்துராமன்,
நாகேஷ்,
சிவகுமாரன்,
சுந்தரராஜன்,
— நடித்த —
தேவரின்



**தெய்வம்**

இசை: திரை இசை மன்னர் குன்றக்குடி வைத்தியநாதன்
டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்
(ஈஸ்ட்மென் கலர்)

31ம் திகதி வெள்ளி முதல்

**கெப்பிட்டல் பிளாஸா வெலிங்டன்**

ஸ்ரீகாந்த், பிரமிளா, நாகேஷ்,
குமாரி பானுமதி, சுந்தரராஜன்,
அசோகன்-

தேவரின்

**கோமாதா என் குலமாதா**

(கலர்)

இப்பொழுது காட்சிதருகிறது 2வது வாரம்

**கெயிட்டி**

உங்கள் காலிலிருக்கும் செருப்பு உங்களுக்கு சேவை செய்து தன்னைத் தானே அழித்துக் கொள்கிறது ஆனல் உங்கள் கையிலிருக்கும் பைப்பு உங்களையே அழிக்கிறது

சாவித்திரி
ஏ. வி. எம். ராஜன்
பிரமிளா
மேஜர்
தேங்காய்சினிவாசன்
எம். ஆர். ஆர். வாசு
— நடித்த —



**வீட்டு மாப்பிள்ளை**

மலரே நீ என் மலரல்ல......?

ராசி நல்ல ராசி உன்னை

**ரீகல்** நுவரெலியா **நெல்சன்** திருமலை

திரைகளில் காட்சியளிக்கிறன்!

எப்படியும் ஆளலாம் என்றில்லாமல் இப்படித்தான் ஆளவேண்டுமென அரசியலுக்கே இலக்கணம் வகுத்தவன் —ராஜ ராஜ சோழன்

தமிழன் சரித்திரத்தை வீரத்தை பெருமையை எவரும் என்றும் அறியும் வண்ணம் கல்வெட்டுகளிலே முதன் முறையாக பதிப்பித்தவன் ராஜ ராஜ சோழன் காணத் தவறாதீர்கள்.

சிவாஜி, விஜயகுமாரி, நம்பியார்,
எஸ். வரலட்சுமி, முத்துராமன் - சிவகுமார். — நடித்த

**ராஜ ராஜ சோழன்** (கலர்)

7 வது வாரம் **செல்லமகால்**

ஜெயந்தி, சிவகுமார், முத்துராமன், சோ,
சுந்தரராஜன், ராகவன் — நடித்த —

**ஷண்முகப் பிரியா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகாமாவத்தை 194 ஏ. இலக்கத்தில் ... ஜனவரி மாதம் 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.